


# தமிழரசு


ஜூன் 16-30, 1999 ரூ.3.









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


★ கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபம் .................... 2
★ கார்கில் போராட்ட நிதி .................... 9
★ சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம் .................... 10
★ சீர்கொடுத்த செந்தமிழ்ச் சீமாட்டி .................... 11
★ கண்ணதாசன் : கவிதை மலர்த் தோட்டம் .................... 12
★ கடல்நீர் குடிநீராகியது .................... 15
★ கலைஞர் 99 – கல்வியாளர் .................... 17
★ அனைவரும் ஒரே குலம் என்ற உயர்ந்த கீதத்தை ஓங்கி ஒலிக்கும் சமத்துவபுரங்கள் .................... 18
★ கன்னிமாரா நூலக நூற்றாண்டு விழாக் கட்டடம் .................... 24
★ பல்தொழில் நுட்பப் பயிலகம் .................... 26
★ பாரதியாரின் பாப்பாப் பாட்டு .................... 30
★ உவமைக் காடு .................... 32
★ ஒன்றுபட்டு நாட்டின் எல்லையைக் காத்திடுவோம் .................... 33
★ வெற்றியின் திறவு கோல்கள் .................... 34
★ மகளிருக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா .................... 36
★ சாதி விலங்குடைக்க வேண்டும் .................... 38
★ நாகை மாவட்டத்தில் தூர்வாரும் பணிகள் .................... 39
★ 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு .................... 41
★ போலியோ ஒழிப்பு .................... 43
★ வரலாற்று நோக்கில் கலிங்கராஜபுரம் .................... 46


## திருக்குறள்

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள் தமது உயிரைப் பற்றிக் கவலை அடைய மாட்டார்கள்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...




தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2030
ஆனி
ஜூன் 16–30, 1999
மலர் : 30 இதழ் : 24
விலை ரூ. 3

# கன்னியாகுமரியில் காமராஜர் மணி மண்டபம்

என் வாழ்க்கையிலே பல்வேறு மகிழ்ச்சிகரமான நாட்கள் வந்துள்ளன என்றாலும் கூட அவைகளுக்கு இணையாக இல்லாமல் மேலும் ஒருபடி மேலாக மகிழ்ச்சி தரக்கூடிய நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நினைவாக குமரிக் கடலோரத்தில் நினைவு மண்டபத்தை, மணிமண்டபத்தை எழுப்புவதற்கு அடிக்கல் நாட்டு விழா நான் பெற்ற பெரும்பேறாகும். அந்தப் பேறு பெற்றமைக்காக ஏதோ ஒரு வகையில் எனக்கு அதனை வழங்கிய மத்திய அரசிற்கு நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மணிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்று நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் நடத்திய அறவழி ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் அதைப்போலவே அந்த வட்டாரத்தில் உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் ஒலித்த குரல் இவைகளை எல்லாம் நாடு மிக நன்றாக அறியும். ஆனால் இங்கே உரையாற்றியவர்கள் குறிப்பிட்டதைப் போல கடற்கரை ஓரத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு மண்டபங்கள் அமைக்கப்படுவது கூடாது என்ற அந்த வரம்பு சுட்டிக்காட்டப்பட்டு மத்திய அரசினுடைய வனத்துறை அமைச்சகம் தொடர்ந்து இதனை மறுத்து வந்தது.

**மத்திய அரசின் அனுமதி பெற அரசு மேற்கொண்ட முயற்சிகள்**

27.9.96 அன்று மத்திய அரசு பிறப்பித்த ஆணைக்கு விதிவிலக்கு அளித்து இந்த மண்டபம் நிறுவுவதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்ற முயற்சியை இந்த அரசு எடுத்து வந்தது. ஆனால் பயனில்லை. கடற்கரைப் பாதுகாப்பு விதிகளின்படி கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவு வரையில் கட்டிடம் கட்டுவதற்கு தடை செய்யப்பட்டபகுதி என்று அறிவிக்கப்பட்டதால் அனுமதி கிடைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. எனவே மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்காக தொடர்புடைய துறைகளிலிருந்து பல்வேறு விவரங்கள் பெற்று மத்திய அரசு



சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைக்கு 7.8.98 அன்று கழக அரசு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பியது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 7.10.98 அன்று அதாவது 2 மாதம் கழித்து அனுப்பிய பதிலில் மேலும் சில விவரங்களைத் தரவேண்டும் என்று தமிழக அரசிடத்தில் கேட்டது. அத்தகைய விவரங்கள் அனைத்தும் 21.1.99 அன்று மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இடம் கடற்கரை நிர்வாக முறைப்படுத்துதல் அறிவிக்கையின் கீழ் கட்டிடங்கள் கட்ட தடை செய்யப்பட்ட இடம் என்றும் மேற்கண்ட விதிகளுக்கு விதிவிலக்கு தற்போது தரஇயலாது என்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை தனது 22.2.99 நாளிட்ட கடிதத்தில் முதலில் தெரிவித்துவிட்டது. மாற்று இடம் ஒன்றை தேர்வு செய்யுமாறும் அந்தத்துறை தமிழக அரசை கேட்டுக் கொண்டது.

### பிரதமருக்கு கடிதம்

பின்னர், 1.4.99 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்டுவதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி அனுமதி வழங்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டடேன்.

இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றதாக 5.4.99 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கடிதம் மூலம் எனக்கு தெரிவித்தார்கள். மேலும் 19.4.99 அன்று மீண்டும் ஒரு கடிதம் எழுதினேன் பிரதமருக்கு. அதில், பல கட்டடங்கள் இதே பகுதியில் கட்டப்பட்டுள்ளன என்பதையும் அங்கே காமராஜர் மணிமண்டபம் கட்ட அனுமதி அளிக்க தடை ஏதும் இருக்க தேவையில்லை என்பதையும் சுட்டிக் காட்டி கடிதம் எழுதினேன். அதற்குப்பிறகு 20.4.99 அதாவது வாஜ்பாய் அவர்களுடைய அரசு கவிழ்க்கப்பட்டு அவர் காபந்து சர்க்காரின் பிரதமராக பொறுப்பேற்றிருந்த அந்தக் காலக்கட்டத்தில் அன்று மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை கன்னியாகுமரியில் இந்த மணி மண்டபம் அமைத்திட அனுமதியை வழங்கியது.

### அரசின் முயற்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள்

இதற்கான முயற்சியை தமிழக அரசு அதனுடைய முதலமைச்சர் என்ற முறையில் நான் தொடர்ந்து எடுத்து வந்தபோதிலும் இதற்கு உறுதுணையாக மத்திய அமைச்சர்களில் ஒருவரான மாண்புமிகு வாழப்பாடி அவர்களும், தம்பி முரசொலி மாறன் அவர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் தம்பி வை.கோ. அவர்களும் மத்திய அமைச்சரோடு தொடர்புக் கொண்டு பிரதமர் வாஜ்பாய் அவர்களோடு தொடர்புக் கொண்டு அவர்களும் என்னுடைய கடிதத்தின் அடிப்படையை வலியுறுத்தியதன் காரணத்தால் இன்றைக்கு இந்த மணிமண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது என்பதை நான் மிகந்த மகிழ்ச்சியோடு நன்றியுணர்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடிய வீரர்கள், தியாகிகளுக்கு பெருமை சேர்க்க வேண்டும், அவர்களைப் புகழ வேண்டும் அவர்களுக்கு மரியாதை தர வேண்டும் என்றெல்லாம் விரும்பி செயல்பட்டதற்குக் காரணம் நாம் செய்வதால் அவர்களுக்கு புதிதாக ஒன்றும் பெருமை வந்துவிடப் போவதில்லை. புகழ் சேர்ந்துவிடப்போவதில்லை. ஆனால் தற்கால இளைஞர்கள் அவர்களைப் போல தாங்களும் தன்னலமற்றவர்களாக தேசத்திற்கு தியாகம் செய்யக் கூடியவர்களாக, விடுதலை வீரர்கள் கொண்டிருந்த அந்த உணர்வை சமுதாய விடுதலைக்கு பயன்படுத்தக் கூடிய அளவிற்கு சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்களைப் பின்பற்றி தங்களுடைய வாழ்க்கையை குறிப்பாக பொதுவாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டு மென்பதற்காகத்தான் மறைந்த தலைவர்களுக்கு, மறைந்த தியாகிகளுக்கு நாம் நம்மால் இயன்ற நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தி வருகின்றோம்.

### சிதம்பரனார் இழுத்த செக்கு

எத்தனையோ நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். உங்களுக்குத் தெரியும். நான் அறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலக்கட்டத்தில்தான் செக்கிழுத்த சிதம்பரனார் என்று நாட்டில் பேசப்பட்டதே தவிர, அவர் இழுத்த செக்கு எந்தச் சிறைச்சாலையில் இருக்கிறது என்று யாரும் தேடிப்பார்க்கவில்லை. நான்தான் அதைத் தேடிப் பார்க்கச் சொல்லி இறுதியாக அது கோவை சிறைச்சாலையிலே இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அந்த சிதம்பரனார் இழுத்த அந்தச் செக்கை கொண்டு வந்து சென்னையில் இராஜாஜி மண்டபத்திற்கு முன்னால் உள்ள முகப்பில வைத்து மக்களுக்கு கண்காட்சியாக ஆக்கினேன். இப்போது அது கிண்டியில் தியாகிகள் மணிமண்டபம் அருகே அமைக்கப்பட்டிருக்கின்றது.

**கொட்டும் மழையில் நின்று புதர்களை அழித்து காமராஜர் உடலடக்கம்**

காமராஜருடைய பெயரால் மணிமண்டபம் மாத்திரம் அல்ல, நம்முடைய அன்பிற்குரிய இலக்கியச் செல்வர் அவர்கள் இங்கு எடுத்துக்காட்டியதைப் போல அவருடைய உயிர் பிரிந்தவுடன் முதலில் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தி என் கண்ணீரை அவருடைய காலடிகளுக்கு காணிக்கையாக்கி அவருடைய நினைவுச் சின்னத்தை — அவருடைய நினைவுச் சின்னத்தை இங்கே எழுப்புவதைப் போல அல்ல. அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட அதே இடத்தில் அமைப்பதற்காக முயற்சி எடுத்தபோது, இலக்கியச் செல்வர் குறிப்பிட்டதைப் போல கொட்டுகின்ற மழையிலே நாங்கள் கிண்டி ராஜ்பவனத்தில் நின்று கொண்டு புதர்களையெல்லாம் அழிக்கச் செய்து மறுநாள் காமராஜர் உடல் அடக்கத்தை அங்கே நடத்தி வைத்தோம்.

அந்த இடத்தில் அவர் நினைவாக ஒரு மண்டபம், எழுப்பபட்டிருக்கிறது. அதற்கு ஒரு பக்கத்தில் இராஜாஜி மண்டபம், இன்னொரு பக்கத்தில் காமராஜர் மண்டபம். இடையில் இரண்டு மண்டபங்களுக்கு மத்தியில் உலக உத்தமர் காந்தியடிகளுடைய நினைவு மண்டபம் அமைந்திருப்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். பெருந்தலைவர் காமராஜருடைய பண்பாடு அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர் போற்றி வந்த அரசியல் நாகரிகம், நட்புணர்வு, பழகுகின்ற எளிய தன்மை, இவைகளையெல்லாம் யாரும் மறக்க முடியாது. அவரோடு பழகியவர்களுக்குத்தான் அது நன்றாக தெரியும். தொலைவிலே இருந்து பார்ப்பவர்களுக்கு அது தெரியாது.

**காமராஜருக்கு ஆதரவு தெரிவித்து பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரை**

அதனால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் குடியாத்தம் தொகுதியில் காங்கிரஸ் தலைவரான பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தேர்தலில் போட்டியிட்டபோது போட்டியில் வெற்றி பெற்றால்தான் அவர் முதலமைச்சராக தொடர முடியும் என்ற நிலை இருந்தபோது அவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி அங்கே தீவிரமாக பணியாற்றியபோது, அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு பத்திரிகையில் எழுதினார்கள். 'குணாளா குலக்கொழுந்தே' என்று தலைப்பிட்டு கட்டுரை எழுதினார். அண்ணாவை எப்படி மறக்க முடியாதோ, பெருந்தலைவர் காமராஜரை எப்படி மறக்க முடியாதோ, அதைப்போலவே மறக்க முடியாத அந்தச் சொற்றொடர் 'குணாளா குலக்கொழுந்தே' என்பதாகும். அப்படி அழைத்து அவருடைய வெற்றிக்கு தி.மு.கழகம் துணை நிற்கும் என்று அறிவித்த அந்த நாளை யாரும் மறக்க முடியாது.

அது மாத்திரம் அல்ல; காமராஜர் உறுதியானவர், திடமானவர், தியாக சீலர், பல ஆண்டுக்காலம் சிறைச்சாலையிலே தன்னுடைய வாழ்க்கையை கழித்தவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக



தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர். முதலமைச்சராக ஒரு காலத்தில ஆவேன் என்று எதிர்பார்த்து இந்தப் பணிகளிலே அவர் ஈடுபட்டவர் அல்ல. அத்தகைய காமராஜர் எவ்வளவு சகிப்புத்தன்மை கொண்டவர் என்பதற்கு இதே கன்னியாகுமரிதான் சாட்சியாக இருக்கிறது. பழைய நிகழ்ச்சி என்றாலும்கூட நான் யாரையும் புண்படுத்துவதற்காக சொல்லவில்லை. காமராஜருடைய சகிப்புத் தன்மைக்கு எடுத்துக்காட்டு என்பதற்காக சொல்ல விரும்புகிறேன்.

1972ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் தேதி அன்று இதே கடற்கரையில் ஒரு பெரிய விழா மத்திய சர்க்காருடைய ரயில்வே இலாகாவின் சார்பில் நடைபெற்றது. அதுதான் திருநெல்வேலி — கன்னியாகுமரி — திருவனந்தபுரம் — பிராட்கேஜ் ரயில்வே லைனுக்கான அடிக்கல் நாட்டு விழா. அந்த விழாவில் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டியவர், அன்றைய இந்திய நாட்டின் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் இன்றைக்கு இங்கே உள்ள இரயிலடியிலே இருக்கின்ற அந்தக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கின்ற எழுத்துக்கள்.

The inaugural stone was unveiled by Srimathy. Indra Gandhi, Prime Minister of India on 6th September 1972 என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்களுக்குக் கீழே

In the presence of

Sri. T.A. Pai, Minister of Railways

Sri. M. Karunanithi, Chief Minister of Tamil Nadu

Sri. Achutha menon, Chief Minister of Kerala

என்று பொறிக்கப்பட்டுள்ளது.

### நான் இறங்கிச் சென்று காமராஜரை மேடைக்கு அழைத்து வந்தேன்

இந்த குமரியில் நடைபெற்ற அந்த விழாவிற்கு அன்றைய இந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய பெருந்தலைவர் காமராஜருடைய பெயர் அழைப்பிதழிலும் இடம் பெறவில்லை. அந்த அடிக்கல் நாட்டு கல்லிலும் இடம் பெறவில்லை என்பது உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்று. இந்தக் காலத்தில் அழைப்பிதழில் இடம் பெற்றாலும் வராமல் இருப்பவர்கள் உண்டு. ஆனால் அன்றைக்கு சகிப்புத்தன்மைக்கு இலக்கணமாக திகழ்ந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அழைப்பிதழில் பெயர் இல்லை. பெயர் இடம் பெறவில்லை என்ற பிறகும்கூட அந்த நிகழ்ச்சிக்கு வந்தார்கள். இந்த வட்டாரத்து மக்களால் விரும்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலும், வாக்களித்த இந்த வட்டாரத்து மக்களுக்கு நன்றி காட்ட வேண்டும் என்பதற்காகவும் தன்னுடைய பெயர் அழைப்பிதழில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்ற அந்த நிகழ்ச்சிக்கு பெருந்தலைவர் காமராஜர் வந்தார்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல இங்கே பிரமுகர்கள் எல்லாம் அமர்ந்திருக்கின்ற இடத்திலே அவரும் அன்றைக்கு உட்கார வைக்கப்பட்டிருந்தார். நிகழ்ச்சி நடத்தியது மாநில அரசு அல்ல; மத்திய அரசு. மத்திய அரசின் இரயில்வே துறையின் சார்பில் விழா நடத்தப்பட்டது. காமராஜர் கீழே உட்கார்ந்திருந்தாலும் நான் இறங்கி கீழே சென்று அவரை அழைத்து வந்து மேடையிலே அமர்த்தினேன். கூடியிருந்த மக்கள் நாங்கள் எல்லாம் பேசும்போது ஒலிமுழக்கம் செய்தார்கள். "காமராஜரை பேசச் சொல்லுங்கள், காமராஜரை பேசச் சொல்லுங்கள்" என்று ஒலி முழக்கம் செய்தார்கள். ஆனால் அந்தப் பெருந்தலைவர் அந்த மேடையிலே பேசவில்லை. பேச வேண்டும் என யாராலும் கேட்டுக்கொள்ளப்படவில்லை. நான் கேட்டுப் பார்த்தேன் அனுமதி கிடைக்கவில்லை.

### அதே குமரிமுனையில் இன்றைக்கு அவருக்கு மணிமண்டபம்

இப்படி ஒரு நிகழ்ச்சி கன்னியாகுமரியிலே நடைபெற்றது. ஆகவே இன்றைக்கு இத்தகைய நிலைக்கு ஆளாக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜரின் சகிப்புத்தன்மை காரணமாக இதே கன்னியாகுமரி முனையிலே அவருக்கு பல இலட்சம் ரூபாய் செலவிலே மணிமண்டபம் அமைக்கிறோம் என்பதுதான் வரலாற்றுப் பெருமை. இதுதான் அந்த மாமனிதருக்கு நாம் செலுத்துகின்ற மரியாதை. அவருக்கு மரியாதை செலுத்தி அவருடைய மரியாதை ஒன்றும் உயரப்போவதில்லை. நம்முடைய மரியாதையை உயர்த்திக் கொள்வதற்காக நாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு இந்த நினைவுச் சின்னத்தை எழுப்புகின்றோம்.

இந்த மணிமண்டபம், இங்கே அமைப்பதற்கு காரணமானவர்களுடைய பெயர்களோடு இதற்கான முயற்சியிலே தொடர்ந்து ஈடுபட்ட நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பெயரையும் நிச்சயமாக இணைத்துக் கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் சரித்திரத்திலே ஒரு பிழை ஏற்பட்டு விடும். அந்த அளவிற்கு நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் இதற்காக

அரும்பணியாற்றிருக்கின்றார். குரல் கொடுத்திருக்கின்றார். அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு தமிழகத்திலே உருவாகியிருக்கின்ற தியாகிகளுக்கான நினைவுச் சின்னங்கள் அது முதலமைச்சர் கருணாநிதியால் திறந்துவைக்கப்பட்டது என்றிருந்தாலும்கூட அதற்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் யார் என்று பார்த்தால் முக்கியமாக நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள்தான் இருந்திருக்கின்றார்.

### விஸ்வநாததாஸ் நினைவுச் சின்னம் அமைக்க தூண்டுதலாக இருந்தவர் குமரி அனந்தன்

தியாகி விஸ்வநாததாஸ் நினைவுச் சின்னம் மதுரைக்கு அருகில் திருமங்கலத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்த உணர்வு ஏன் எனக்கு வந்தது என்றால் ஒரு வாரப்பத்திரிகையில் தியாகி விஸ்வாநாததாஸைப் பற்றி ஒரு கட்டுரை வந்தது. அதைப் படித்தேன். அது இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் எழுதிய கட்டுரை. அதிலே விஸ்வநாததாஸ் அவர்களுடைய அருமை பெருமைகளையும் ஒரு நாடக நடிகராக இருந்து கொண்டு நாடகத்தின் மூலமாக 'கொக்கு பறக்குதடி பாப்பா; வெள்ளைக் கொக்கு பறக்குதடி பாப்பா' என்ற பாட்டைப் பாடி வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அவர் ஒலித்த அந்தப் போர் முரசை சுட்டிக்காட்டி அவருடைய வாரிசுகளெல்லாம் இன்றைக்கு ஓய்வூதியம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவருக்கு நினைவு சின்னம் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவருடைய வாரிசுகளுக்கு ஏற்கெனவே மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோதே அவர்களை தேடிப் பிடித்து அவர்களுக்கெல்லாம் உதவிப் பணம் அரசின் சார்பாக வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்பதற்காக உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு விஸ்வநாததாஸினுடைய வீட்டை ஒரு படம் எடுத்து அனுப்புங்கள் என்று சொன்னேன். அவர்கள் படம் எடுத்து அனுப்பினார்கள் உடனடியாக தம்பி முல்லைவேந்தனிடத்திலே எடுத்துச் சொல்லி அந்தத் துறையிலே உள்ளவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி அந்த வீட்டை பழுதுபார்க்க முடியுமா என்று கேட்டபோது இயலாது என்றார்கள். அந்த அமைப்பு குறையாத அளவிற்கு அன்றைக்கு அந்த வீடு எப்படி இருந்ததோ அதே போல அந்த வீட்டை புதுப்பிக்கச் சொல்லி பல இலட்ச ரூபாய் செலவில் அந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டு இன்றைக்கு விஸ்வநாததாஸினுடைய நினைவுச் சின்னமாக அமைந்திருக்கிறது. இதை நான் எண்ணும்போது அதற்கும் தூண்டுகோலாக இருந்தவர் நம்முடைய இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் அவர்களாவார்கள்.

இவை எல்லாவற்றையும் விட இன்னொன்றையும் உங்களுக்குச் சொல்ல வேண்டும். கிண்டி ராஜ்பவனத்தில் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காந்தி மண்டபம், இராஜாஜி மண்டபம், பக்தவத்சலம் நினைவு மண்டபம், காமராஜர் மண்டபம் இவைகளுக்கருகில் இன்னொரு மண்டபம் ஒன்று உருவாகி இருக்கிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நான் அதைத் திறந்து வைத்தேன். அதற்கு இலக்கியச் செல்வரும் அழைக்கப்பட்டிருந்தார். அவரும் வந்து உரையாற்றினார். அதுதான் தியாகிகள் மணிமண்டபம். தியாகிகள் மணிமண்டபம் என்றால் எல்லா தியாகிகளின் படங்களும் அங்கே வைக்க வேண்டும். அந்தக் காரியத்தை யார்ஏற்றுக்கொள்வது என்கிறபோது நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று முன் வந்து நூற்றுக்கணக்கான தமிழகத்திலே உள்ள இந்திய விடுதலைப்போராட்ட வீரர்கள் மறைந்தவர்கள், படைங்களையெல்லாம் சேகரித்து அரசுக்கு அனுப்பி வைத்து அவைகளெல்லாம் இன்றைக்கு கண்ணாடி போடப்பட்டு படங்கள் மாட்டப்பட்டு, அந்த மண்டபத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றது.

### கட்சிமாச்சாரியங்களுக்கு அப்பாற்பட்டு தியாகிகளைப் போற்றுகின்ற அரசு

அந்த மண்டபத்தின் முகப்பிலேதான் — இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த தியாகிகள் மணிமண்டபத்தின் முகப்பில் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக போராடி மாண்டுவிட்ட தியாகி சங்கரலிங்க நாடார் அவர்களின் உருவச்சிலை வைக்கப்படும் என்றும் அதைப்போலவே கோட்டையிலே பறந்து கொண்டிருந்த வெள்ளைக்காரனுடைய கொடியை கீழே இறக்குவதற்காக மேலே ஏறி அதை இறக்கி கீழே போட்டுவிட்டு அன்றைக்கு காவல்துறையிடமிருந்து தப்பித்த பாஷ்யம் என்கிற ஒரு பிராமணச் சிறுவன். அந்த பாஷ்யம் இன்றைக்கு 90 வயதாகி இறந்து விட்டார். அவருடைய சிலையும் அங்கே வைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறேன் என்றால் இந்த அரசு கட்சிமாச்சாரியங்களுக்கு அப்பாற்பட்டு, அரசியல் நெருக்கடிகளுக்கு அப்பாற்பட்டு

அனைத்தையும் கடந்து தியாகிகளைப் போற்றுகின்ற அரசு என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை என்று நான் கருதுகின்றேன்.

பெருந்தலைவர் காமராஜரிடத்திலே பணியாற்றிய வைரவன் திக்கற்று நின்றார். அவரை அழைத்து வந்து நாத்திகம் ராமசாமி என்னிடத்திலே அறிமுகப்படுத்தினார். அவருக்கு பெருந்தலைவர் காமராஜருடைய நினைவகத்தில் ஆயிரம் ரூபாய் ஊதியத்திலே வேலை போட்டுக் கொடுத்து அவருக்கு வீடு ஒன்றும் வழங்கியது இந்த அரசு. பெரியவர்



பக்தவத்சலம் அவர்களுடைய மெய்க்காப்பாளராக இருந்தவர் பாலு என்ற ஒரு நண்பர். நான் 96ஆம் ஆண்டு சேப்பாக்கம் தொகுதியில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது என்னைத் தெரிகிறதா என்று ஒரு உருவம் என்னைப் பார்த்துக் கேட்டது. யார் பாலுவா என்றேன. ஆமாம். பக்தவத்சலம் அவர்களிடத்திலே பணியாற்றினேன். அவர் போனபிறகு அநாதையாக நிற்கிறேன் என்று சொன்னார். அவருக்கு இன்றைக்கு வாழ்வளிக்கின்ற வகையில் அவருக்கு பதவிக்கால நீட்டிப்பும் தந்து, அவருக்காக ஒரு வீடும் வழங்கி அந்த வீடு வழங்கிவிட்டீர்கள் அந்த வீட்டை சீர் படுத்துவதற்கு என்னிடத்திலே பணம் இல்லை என்று சொன்னபோது முதலமைச்சர் நிதியிலிருந்து மூன்று இலட்ச ரூபாயை சென்ற மாதம் தந்து அவருக்கு வாழ்வளித்தோம் என்றால் பக்தவத்சலத்திடம் இருந்தார் என்பதற்காக பாலுவிற்கு, பெருந்தலைவர் காமராஜரிடத்திலே இருந்தார் என்பதற்காக வைரவனுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அடுக்கிக் கொண்டே போகலாம்.

கட்டபொம்மன் கோட்டையிலிருந்து பூலித்தேவன் கோட்டை வரையில் என்னென்ன தியாகச் சின்னங்களை நிறுவியிருக்கிறோம். வள்ளியம்மாளை நினைவுடுத்த வள்ளியம்மை நகரையே தில்லையாடியில் உருவாக்கியிருக்கிறோம். சிதம்பரனாருக்குச் சிலை வைத்திருக்கின்றோம். காமராஜரை ஈன்ற தாய் அன்னை சிவகாமி அவர்களின் பெயரால் தூத்துக்குடியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தை அமைத்திருக்கிறோம். இப்படி காமராஜரையும் காங்கிரஸ் கட்சி என்றும் பாராமல் இவர்களெல்லாம் தியாகிகள் என்ற முறையிலே தியாகிகளைப் பாராட்ட இந்த அரசு எடுத்துக்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள்.

இங்கே பேசிய மனோதங்கராஜ் அவர்கள் தியாகிகளைப் பற்றி குறிப்பிட்டார். சொன்னால் வருத்தப்படக்கூடாது. குமரி அனந்தன் வருத்தப்படமாட்டார். ஏனென்றால் உரிமையோடு எடுத்துக் கொள்வார் என்று கருதுகிறேன். இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்ட தியாகிகள் ஆறுபேருக்குத்தான் மாதாந்திர ஓய்வூதியம் தரப்பட்டது. நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகுதான் அந்த ஆறு என்ற எண்ணிக்கை எட்டாயிரம் என்று

உயர்ந்தது. இதை மறந்துவிடக்கூடாது. அந்த எட்டாயிரம் பேரிலே ஒரு இரண்டாயிரம் மூவாயிரம் பேர் மறைந்துவிட்டார்கள். மீதமுள்ள ஏறத்தாழ ஒரு ஐயாயிரம் பேருக்கு இன்றைக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

இது முதலிலே 75 ரூபாய் என்று தொடங்கப்பட்டு பிறகு நூறாகி, இருநூறாகி, ஐநூறாகி, ஆயிரமாகி இந்த சுதந்திரப் பொன்விழாவையொட்டி அவர்களுக்கெல்லாம் மூவாயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவித்து மூவாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அவர் மறைந்துவிட்டால் அவரது வாரிசுதாரர்களுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து தற்போது வழங்கப்படுகிறது. ஒரு 142 பேர் இங்கே விடுபட்டுவிட்டது என்று குறிப்பிட்டார்கள். காலையிலே கூட சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பலநேரங்களிலே நண்பர் வேலாயுதம் அதைப்பற்றி என்னிடத்திலே நினைவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால் இந்த 142 பேருக்கு அவர்கள் சிறையில் இருந்ததற்கு சான்றுகள் இல்லை. நான் அவர்களுக்கு இப்போதும் சொல்லிக் கொள்வேன், காமராஜருடைய பெயரால் மணிமண்டபம் எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டப்படுகின்ற இந்த விழாவிலே உறுதியாகச் சொல்கிறேன் இந்த மாவட்டத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுபாடு கருதாமல் அவர்கள் தி.மு.க சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, மார்க்சிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், தா.ம.கா. சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களாகவே ஒரு குழு அமைத்துக் கொண்டு இந்த 142 பேரில், யார் யார் சரியான முகவரிக்காரர்கள், யார் யாருக்குத் தரலாம் என்ற பட்டியலை இந்த 142க்குள்ளாக எனக்கு அனுப்புவார்களேயானால் அவர்களுக்கு உதவி செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

## தியாகிகளின் பிள்ளைகளுக்கு அரசுப்பேருந்தில் இலவசப் பயணம்

தியாகிகளுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய விதவைகளுக்கு, அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கு இன்னமும் அரசுப் பேருந்துகளில் 5—11—96 முதல் இலவச பயணம் செய்ய அனுமதி வழங்கியிருக்கிறது இந்த அரசு என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமாத்திரமல்ல, தியாகி இறந்துவிட்டால் அவர்களுடைய ஈமச்சடங்குகளை நிறைவேற்ற உடனடியாக அந்த குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் நிதியினை இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, மரணமடையும் விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அதிகாரி சென்று அரசின் சார்பில் மலர் வளையம் வைத்து இறுதி வணக்கம் செலுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததும் இந்த அரசுதான்.

தியாகிகள் இந்த நாட்டிற்காக தியாகம் செய்தவர்கள். இதிலே கட்சி வண்ணம் பூசுவதிலே எந்தவித பொருளும் இருக்க முடியாது என்கின்ற உணர்வோடு அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. காமராஜருக்கு மணிமண்டபம் கட்டுவது மாத்திரமல்ல, அவரைப் பின்பற்றி தியாகம் புரிந்த எல்லோருக்கும் உதவிகளைச் செய்வது காமராஜருக்கு நாம் எழுப்புகின்ற மணிமண்டபம் என்பதை நான் உணர்கின்றேன். இதைவிட பெரிய மணிமண்டபமாக அதைத்தான் காமராஜர் உயிரோடிருந்தால் கருதுவார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

## நெருக்கடி நிலையை எதிர்த்து முதல் குரல் எழுப்பியவர் காமராஜர்


இந்தியாவிலே ஜனநாயகத்திற்கு ஒரு சிறு ஆபத்து வந்தது என்றவுடன் தேசம் போச்சு தேசம் போச்சு என்று முதல் குரல் எழுப்பிய பெருந்தலைவர் நெருக்கடி கால பிரகடனம் வந்தபோது முதல் குரல் எழுப்பியவர் காமராஜர்.

அடுத்ததாக செயற்குழுவைக் கூட்டி தீர்மானம் போட்டது இந்தியாவிலேயே ஒரே ஒரு கட்சி. அதுவும் ஆளுங்கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதன் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை இழந்தது என்று உங்களுக்குத் தெரியும். அந்த நேரத்திலே பெருந்தலைவர் காமராஜரைக் காண நான் அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். உடல் நலிவோடு படுத்திருந்தார். சென்று அவரை நான் தழுவிக் கொண்டேன். அவரும் என்னை தழுவிக் கொண்டார். அப்போது சொன்னார் தேசம் போச்சு தேசம் போச்சு என்று. "இப்போது கட்டளையிடுங்கள் நான் ராஜினாமா செய்துவிட்டு உங்கள் பின்னல் அணிவகுக்கின்றேன். நீங்கள் தலைமையேற்று நடத்துங்கள் இரண்டாவது சுதந்திரப்போராட்டத்தை" என்று நான் சொன்னபோது "கொஞ்சம் பொறுமையாக இரு. இந்தியாவிலே சுதந்திரகாற்றை சுவாசிப்பதற்கு ஒரே ஒரு இடமாக தமிழகம்தான் இருக்கிறது. அதையும் இழந்துவிடக்கூடாது" என்று எனக்கு அறிவுரை கூறியவர் பெருந்தலைவர் காமராஜர்.

அந்த உத்தமரின் பெயரால் அமைகின்ற மணிமண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவதை என்னுடைய வாழ்நாளில் நான் பெற்ற பெருமையாகக் கருதி உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இந்த விழாவிலே கலந்துகொண்ட என்னுடைய அன்பிற்குரிய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**— கன்னியாகுமரியில் 27.6.99 அன்று கமராஜர் மணிமண்டப அடிக்கல்நாட்டு விழாவில் ஆற்றிய உரை... ★**

# கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதிக்கு வாரி வழங்கிட



இந்தியத் திருநாட்டின் ஒற்றுமை உணர்வின் மீது பிற நாட்டார் மோதிடக் கருதியபோதெல்லாம் நம் மக்கள் அனைவரும் ஒருருக் கொண்டு எதிர்த்து நின்று வெற்றிக் கொடி நாட்டிய வரலாறு நமக்கு உண்டு.

அந்த வரலாற்றை மறந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ பாகிஸ்தான் நமது அன்னை பூமியின் பக்கம் காஷ்மீரப் பகுதியில் கார்கில் எல்லையோரத்தில் வாலாட்டிப் பார்க்கிறது.

இந்த விஷம விளையாட்டைத் தொடக்கத்திலேயே முறியடித்திட நமது படை வீரர்கள் தமதுயிரைத் துச்சமென மதித்து எல்லைப் பகுதிகளில் நடைபெறும் ஊடுருவல்களைத் தகர்த்த வண்ணம் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

களத்தில் இந்தியப் போர் வீரர்கள் சிலர் பலியாகின்ற செய்தியும், படுகாயமுறுகிற செய்தியும் - அவர்தம் குடும்பங்களும் - வழித்தோன்றல்களும் படுகின்ற துன்ப துயரங்களும் நம்மை வாட்டி வதைத்தவாறு உள்ளன.

இந்தியப் பிரதமர்கள் பண்டித நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோர் காலங்களில் நாம் எதிர்கொண்ட போர்களில் அரசியல் மாச்சரியங்களையும், கட்சி வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு அனைவரும் ஓரணியில் நின்று நமது ஒற்றுமையை நிலைநாட்டியுள்ளோம்.

இதோ-இப்போதும் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் இந்தியாவின் ஒருங்கிணைந்த வலிமையை பாகிஸ்தானின் ஆணவத்திற்கு ஓர் அறைகூவலாகக் காட்டிடும் வாய்ப்பு நமக்கெல்லாம் கிட்டியுள்ளது.

இந்த முக்கியமான நேரத்தில் அவரவர் தங்களால் இயன்ற அளவு களத்தில் நிற்கும் வீரர்களுக்கு உதவிடவும் துணை புரியவும் முன்வர வேண்டும்.

மத்திய பாதுகாப்பு அமைச்சகம் திரட்டுகிற நிதியில் சேர்க்கிற வகையில் தமிழக அரசின் சார்பிலும் "கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதி" வழங்கிட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாநிலங்களவை உறுப்பினர்களும் இந்த நிதிக்கு தங்களின் ஒரு மாத ஊதியத்தை வழங்கிட முன் வந்துள்ளனர்.

இதனை அரசு அலுவலர்களும், ஆசிரியப் பெருமக்களும் அவர்களைத் தொடர்ந்து தொழிலாளர்களும், மாணவர்களும், வணிகர்களும், மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், நீதித்துறையினரும், கலைத்துறையினரும் அனைத்துத் தமிழ் மக்களும் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு உரிய விபரத்துடன் காசோலைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திரளும் நிதி தமிழக அரசின் சார்பாக செய்யப்படும் போர் வீரர் நிவாரண பணிகளுக்கும், கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதிக்கென மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

*நிதி அனுப்ப வேண்டிய முகவரி :*

**செயலாளர்,**
**பொதுத்துறை, தமிழக அரசு,**
**செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—600 009.**

என்ற முகவரிக்கு "கார்கில் போராட்ட வீரர் நிவாரண நிதி"க்காக என்று குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## முதல்வர் கலைஞர் வேண்டுகோள்

# சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கெனத் தனியாகப் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

சென்னையில் எழும்பூரில் 29.6.1999 அன்று நடைபெற்ற இருதய ஆண்டவர் ஆலய 150வது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய பொழுது முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் ஆகியோரின் மேம்பாட்டிற்காகச் செயல்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, சிறுபான்மை யினரின் நலன்களையும், அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதில் தனிக்கவனம் செலுத்துவதற்காக சிறுபான்மை யினருக்கெனத் தனி பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்படும் என்றும், அதற்குரிய அறிவிப்புகள் இரண்டொரு நாளில் அரசின் சார்பில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அதன்படி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினை உருவாக்குவதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1.7.99 அன்று ஆணையிட்டார். இந்த ஆணையின் மூலம் அமைக்கப்படும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,

சிறுபான்மையின மக்கள் தங்களுடைய பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை தொடர்வதற்காக அவர்களுக்கு குறைந்த வட்டிக்குக் கடனுதவி வழங்கும் என்றும்,

சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதப்படக் கூடிய வணிக, வியாபார, தொழில் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் என்றும்,

மத்திய, மாநில அரசுகளிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெற்று சிறுபான்மையின மக்கள் பயனடையும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிரமாகச் செயல்படும் என்றும், இக்கழகம் 5 கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்படும் என்றும், அதற்கு உடனடியாக 1 கோடி ரூபாய் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகிறது என்றும் முதலமைச்சர் **கலைஞர்** அறிவித்துள்ளார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் திரு.அலாவுதீன், ஐ.ஏ.எஸ். இந்த அமைப்பின் தலைவராகக் கூடுதல் பொறுப்பிலும் வகிப்பார். பொதுமேலாளராக திரு. எமரால்டு கிங்ஸ்லியும் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# சீர் கொடுத்த செந்தமிழ்ச் சீமாட்டி!



முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!
வட்டிக் கணக்கே
வாழ்வென் றமைத்திருந்த
செட்டி மகனுக்கும்
சீர்கொடுத்த சீமாட்டி!
தோண்டுகின்ற போதெல்லாம்
சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம்
விளைகின்ற நித்திலமே!
உன்னைத் தவிர
உலகில்எனைக் காக்க
பொன்னோ பொருளோ
போற்றிவைக்க வில்லையம்மா!
என்னைக் கரையேற்று
ஏழை வணங்குகிறேன்!

## கருணாநிதித் தலைவ கவிதை வணக்கமிது!

மலையளவு நெஞ்சுறுதி
வானளவு சொற்பெருக்கு
கடலளவு கற்பனைகள்
கனிந்துருகும் கவிக்கனிகள்
இவைதலையாய் ஏற்றமுற்று
இளந்தலைகள் வாழ்த்தொலிக்க
அவைத்தலைமை ஏற்றிருக்கும்
அன்புமிகும் என்தோழ!
கூட்டத்தைக் கூட்டுவதில்
கூட்டியதோர் கூட்டத்தின்
நாட்டத்தை நாட்டுவதில்
நற்கலைஞன் நீயிலையோ!
அந்தச் சிரிப்பல்லவோ
ஆளையெல்லாம் கூட்டிவரும்
அந்தச் சிறுமீசை
அப்படியே சிறைப்படுத்தும்!
சந்திரனைப் போலத்
தகதகவென்றே ஒளிரும்
அந்த வழுக்கையில்தான்
அரசியலே உருவாகும்!
எந்தத் துயரினிலும்
இதயம் கலங்காதோய்!
முந்துதமிழ்த் தோழ!
முனைமழுங்கா எழுத்தாள!
திருவாரூர்த் தேரினையே
சீராக்கி ஓடவிட்டுப்
பல்கும் மழைத்துளியைப்
பரிசாக பெற்றவனே!
கருணாநிதித் தலைவ!
கவிதை வணக்கமிது!

– கவியரசு கண்ணதாசன்



# கண்ணதாசன் கவிதை மலர்த்தோட்டம்

இராமநாதபுரம மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் சாத்தப்பச் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் எட்டாவது மகனாக 24.6.1927ல் கண்ணதாசன் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் முத்தையா என்பதாகும். இவருடன் பிறந்த சகோதரர் இருவர்; சகோதரியர் அறுவர். புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஏ.எல். சீனிவாசன் இவரது உடன் பிறந்தவர் ஆவார்.

தேவகோட்டைக்கு அருகிலுள்ள அமராவதிபுதூரில் உள்ள குருகுலத்தில் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், அப்போது அந்தக் குருகுலத்தில் இவருக்கு ஆசிரியர். குருகுலத்தில் எட்டாவது வரைதான் பயின்றார் என்றாலும், தமிழ் இலக்கியம், இலக்கணங்களில் ஆர்வமும் திறமையும் இவருக்கு ஏற்பட்டன. குடும்பச் சூழ்நிலையின் காரணமாகக் குருகுலக் கல்வியைத் தொடர இயலாமற் போய்விட்டது.

ஏற்கெனவே எழுத்தார்வம் கொண்டவர் ஆதலின், பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிய விரும்பினார். எண்ணிய வண்ணமே நடை பெற்றது. 1944-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் இராமச்சந்திர புரத்திலிருந்து வெளிவந்த 'திருமகள்' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். அப்போது கண்ணதாசன் என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்டார். பின்னர் 'திரை ஒலி', 'மேதாவி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதன் பின்னர் சேலம் மாடர்ன் தியேட்டர் நடத்தி வந்த 'சண்டமாருதம்' என்னும் திரைப்பட இதழின் ஆசிரியரானார். சிறிது காலத்தில் அப்பத்திரிகை நிறுத்தப்பட்டதால், 1948இல் மாடர்ன் தியேட்டர்ஸ் கதைத் துறையில் பணிபுரியத் தொடங்கினார். 1949-ஆம் ஆண்டில் ஜீபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தார் தயாரித்த 'கன்னியின் காதலி' என்னும் படத்தில் முதன்முறையாக பாடல் எழுதினார். அவரது முதற்பாடலின் பல்லவி.

**கலங்காதிரு மனமே – உன்**
**கனவெல்லாம் நனவாகும் ஒருதினமே!**

'அவள்' இவரது முதல் கவிதை. அகத்துறையைச் சேர்ந்த இந்தக் கவிதையை 1944ஆம் ஆண்டு 'திருமகள்' இதழில் எழுதினார். இவர் எழுதிய முதற்காவியம் 'மாங்கனி'.

1949-ஆம் ஆண்டில் இவர், காரைக்குடியில் இருந்த பழனியப்பச் செட்டியார் தெய்வானை ஆச்சி தம்பதியருக்குச் சுவீகார மகன் ஆனார். அப்போது முத்தையா என்னும் பெயர் நாராயணன் என மாற்றப் பட்டது.

சேலத்தில் 1949ஆம் ஆண்டு மார்டன் தியேட்டரில் பணியாற்றியபோது கலைஞர் அவர்களின் அறிமுகத்தைப் பெற்றார். கலைஞரால் கவரப்பட்டு தி.மு.க.வில் சேர்ந்தார். கல்லக்குடி பெயர் மாற்ற அறப்போரில் கலைஞருடன் கலந்து கொண்டு சிறை சென்றார்.

1954-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 'தென்றல்' என்னும் இலக்கிய வார ஏட்டைச் சொந்தமாகத் தொடங்கி நடத்தினார். தென்றல் ஏட்டில் இவர் நடத்தி வந்த 'வெண்பாப்போட்டி' தமிழ் இலக்கியப் பித்தர்களை மிகவும் ஈர்த்தது. அவ்வெண்பாப் போட்டியில் பங்குகொண்டு பயிற்சி பெற்ற பலர் இன்று புகழ் பெற்ற கவிஞர்களாக விளங்கு கிறார்கள்.

'தென்றல் திரை', 'முல்லை', 'கடிதம்' ஆகிய ஏடுகளின் ஆசிரியராக இருந்ததுடன் அவற்றைச் சொந்தத்தில் நடத்தவும் செய்தார். பின்னர் 'கண்ணதாசன்' என்னும் திங்கள் ஏட்டின் ஆசிரியராக இருந்து இலக்கிய பணியை மிக அருமையாகத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரது கவிதைகள் ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி, கவிதாஞ்சலி, தைப்பாவை, பாண்டிமாதேவி ஆகியவை இவரது காவியங் களாகும்.

ஏறக்குறைய எட்டுக் கவிதைத் தொகுப்பு களையும், 20-க்கு மேற்பட்ட நவீனங்களையும், 20-க்கு மேற்பட்ட கட்டுரை நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இவரது 'அர்த்தமுள்ள இந்துமதம்' 6 பாகம் வெளிவந்துள்ளது. இந்நூல் எண்ணற்ற வாசகர்களின் வரவேற்பைப் பெற்றது. இந்நூல் 45 நிமிடம் ஓடுகின்ற அளவுக்கு எல்.பி. இசைத்தட்டாகவும் அமைக்கப்பட்டது. அதில் கவிஞரே பேசியுள்ளார்.

வணங்காமுடி, தமிழ்மன்னன், காரை முத்துப்புலவர் என்பவை கவிஞரின் ஏனைய புனைப்பெயர்கள்.

கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் ஈடுபாடு கொண்ட கவிஞர் அன்னார் இருவரையும் தமது மானசீகக் குருநாதர்களாகக் கொண்டிருந்தார்.

நாவலைப் பொறுத்தவரை, வங்க இலக்கிய மேதை சரத்சந்திரருக்கு இவரது உள்ளத்தில் தனி இடம் உண்டு. அதன் காரணமாகவே சரத்பாபுவின் 'சந்திரநாத்' என்னும் நவீனத்தை இவர் 'மாலையிட்ட மங்கை' என்னும் பெயரில் சொந்தமாகத் திரைப்படமாக்கினார்; அதற்குரிய வசனம், பாடல்களை இவரே அமைத்தார்.

இவரது 'அழகி' என்னும் கவிதை இதுவரை ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகியவற்றில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

இவர் எழுதிய 'பாடாய் தும்பீ! மணவறைப் பாட்டு' என்னும் கவிதை சாகித்திய அகாதமியினால் 1958-ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டு AU REVOIR என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

இவர் எழுதிய குட்டிக் கதைகள் கன்னடத்திலும், புஷ்பமாலிகா என்னும் நூல் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

'விளக்கு மட்டுமா சிவப்பு?' என்னும் நவீனம் 'மலையாள நாடு' என்னும் இதழில் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது.



கவியரசு கண்ணதாசனின் 73வது பிறந்த நாளான 24.6.99 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆற்காடு வீராசாமி, திரு.வ.முல்லைவேந்தன் வணக்கத்துக்குரிய மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் தி.நகரில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்தனர்.

திரைப்படங்களுக்கு மிகச் சிறப்பாக உரையாடல் எழுதிய பெருமை இவருக்கு உண்டு. ஏறக்குறைய 20 படங்களுக்கு மேல் உரையாடல்கள் எழுதியிருக்கிறார். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளையும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியிருக்கிறார்.

இந்தியாவிலேயே சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் என்னும் விருதை மத்திய அரசினரிடம் 1970–ஆம் ஆண்டு பெற்றார். அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு அளித்த சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் விருதையும் பெற்றிருக்கிறார்.

பண்டிதரும் பாமரரும் ஒருசேரப் போற்றிப் புகழும் வண்ணம் பாடல்களையும், கவிதைகளையும் எழுதுவதில் தனித் திறமை பெற்றவர் இவர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அரசுக் கவிஞராக நியமிக்கப்பட்டார்.

இவருடைய 'சேரமான் காதலி' நூல் சாகித்ய அகடமியின் பரிசினைப் பெற்றது. எம்.ஏ.சி. அறக்கொடையின் சார்பில் அண்ணா மலையரசர் நினைவுப் பரிசாக வழங்கப்படும் ரூ.10,000ஐ சிறந்த கவிஞர் என்பதற்காகப் பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் நடந்த தமிழ்ச்சங்க விழாவிலும், கவிஞர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்ள சென்ற கவிஞர் கண்ணதாசன் நெஞ்சுவலி காரணமாக சிகாகோ நகர மருத்துவமனையில் 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் நாள் சேர்க்கப்பட்டார். சில நாட்கள் உணர்வு இழந்த நிலையில் இருந்த இவர், பிறகு கண்விழித்துப் பார்த்தார். பிறர் பேசுவதைப் புரிந்து கொண்டார். அவர் உதடுகள் அசைந்தன என்றாலும் பேசமுடியவில்லை.

இன்னும் மூன்று மாதங்களில் முழுமையாக குணம் அடைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 17.10.81அன்று இந்திய நேரப்படி இரவு 10.45 மணிக்கு மரணமடைந்தார்.

கவியரசர் பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோருக்குப் பின்னே இந்த நூற்றாண்டில் தலைசிறந்த கவிஞராகத் திகழ்ந்தார் கவியரசு கண்ணதாசன்.

★ ★ ★

---

## வென்றே, வாழ்க!

பிறப்பாலே ஒன்றான மனிதர்க் குள்ளே
பேதம் ஏன்? பிரிவும் ஏன்? பூக்கள் மேலே
இருப்பதுண்டோ கூர்முறுக்கள்? சிகப்பு ரத்தம்
எல்லோர்க்கும் ஒன்றன்றோ? இடையில் சாதி
உருவாக்கி, உழைக்காமல் உயரத் தானே
திட்டமிட்டுச் சமுதாயத் தீங்கு செய்தார்!
'பெரியார்'கள் சொன்ன பின்னும் இன்னும் சாதி
பேசுவது, சமுதாய நீதி தானா?

மண்ணுக்குள் வேர்ப் பலாவும் பழுத்தாற் போன்று
மனதிற்குள் வைத்திருந்து, திட்டம் போட்டுக்
கண்ணுக்குள் கண்ணாக இணைந்து வாழ
கலைஞரின்று சமத்துவபு ரம்கண் டாரே!
புண்ணுக்கு மருந்திடுதல் அன்று! பெரிய
பூகம்பம் தனைத்தடுக்க, புயலை வெல்ல
எண்ணமெலாம் நேயமுடன் புதுமை கண்டார்
இத்தொண்டு தீமைகளை வென்றே, வாழ்க!

– கவிஞர் அம்மையப்பனார்

வாழ்க்கை ஒரு நாடகக் காட்சி.
அதில் எனது இயல்பிற்கேற்ற
நண்பருடன்தான் சேருவேன்;
கொடியருடனும் கோமாளிகளுடனும்
பேசிக் களிக்க என்னால் இயலாது!

– ஜான் மில்டன்

வாய்மை நிறைந்தவர்கள்
எவ்வளவு புகழ் வந்தாலும்
பெரியோர் மீதான பக்தியை
ஒருபோதும் குறைத்துக்
கொள்வதில்லை.

– டென்னிஸன்

# கடல்நீர் குடிநீராகியது

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 25-6-1999 அன்று, இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் கடல் நீரை குடிநீராக்கி மக்களுக்கு வழங்கும் விழாவிற்கு தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் பெல் நிறுவனமும் இணைந்து ரூ.55.22 கோடி மதிப்பில் இந்தத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.


இதன் மூலம் 1,83,000 மக்கள் பலனடைவார்கள். 3 ஊராட்சி ஒன்றியங்களும், 90 ஊராட்சிகளும், 296 குடியிருப்புகளும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

மொத்தமுள்ள 45 சுத்திகரிப்பு நிலையங்களிலும் நரிப்பையூர் சுத்திகரிப்பு நிலையந்தான் மிகப் பெரியது. அதன் மதிப்பு மட்டும் ரூ.32.14 கோடியாகும். இதர தொகை மற்ற சுத்திகரிப்பு நிலையங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக இந்தத் திட்டத்தில் பயன் பெறுபவர்கள் 1,05,300 பேராகும். இரண்டாம் கட்டமாக 7,07,700 பேர் பலன் பெறுவார்கள்.

ஒரு நபருக்கு இதுவரை 5 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் இனி கூடுதலாக 13 லிட்டர் வீதம் அதாவது 18 லிட்டர் வழங்கப்படும்.





**இவ்விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி...**

''இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏதோ ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் தொடங்கப்பட்ட திட்டம் என்றாலும் கூட, அது உலகளாவிய நிலையில் வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க, வியப்போடு உற்று நோக்கத்தக்க ஒரு மாபெரும் திட்டம்.

நான் தம்பி கோ.சி.மணியிடத்திலும், மற்றவர்களிடத்திலும் குறைபட்டுக் கொண்டேன். இதை இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களிலே உள்ள பத்திரிகையாளர்கள் எல்லாம் பார்த்திட வேண்டும். அவர்களை எல்லாம் நீங்கள் அழைத்திருக்க வேண்டும். அவர்கள் அழைப்பது இந்த திட்டத்திற்காக விளம்பரத்தை பெறுவதற்காக அல்ல. நாம்தான் இந்தியாவிலேயே முதன் முறையாக இதைச் செய்து முடித்திருக் கிறோம் என்று மார்தட்டிக் கொள்வதற்காக அல்ல. இதைப் பார்த்து மற்ற மாநிலங்களிலும் கடல் தண்ணீரை, உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக ஆக்கி பாதுகாக்கப்பட்ட தண்ணீராக ஆக்கி ஏழை எளிய மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு தருவதற்கு ஒரு வழிகாட்டியாக இது அமையும். ஆகவே மற்ற மாநில பத்திரிகை யாளர்களையும் நீங்கள் அழைத்திருக்க வேண்டும் என்று நான் அவர்களிடத்திலே குறிப்பிட்டேன்.

அந்த அளவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் செலவில் இன்றைக்கு நிறைவேற்றி யிருக்கிறோம். அதன் வாயிலாக கடலாடி, கமுதி ஆகிய இந்தப் பகுதிகளுக்கும் முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளுக்கும், அஃதன்னியில் இராமநாதபுரம், இராமேஸ் வரம் பகுதிகளுக்கும் பயனடையக்கூடிய நிலை முதற்கட்டமாக இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.


தொடர்ந்து அடுத்தடுத்த கட்டம் - பல இலட்சம் மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை பயன்படுத்துகின்ற நிலை இந்த வட்டாரத்தில் உருவாகும் என்பதை நான் உறுதியாக உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்''.

இவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் 7 மற்றும் 8ஆம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டின் பரிந்துரைகளின் அடிப்படையில், கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்துவதற்கான குறியீட்டு முறைகளும், விசைப் பலகை அமைப்பும், பன்னாட்டு அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டுத் தகவல் தொழில்நுட்பத் துறையின் துணைக் குழுவினால் முடிவு செய்யப்பட்டது.

13-6-1999 அன்று தமிழக அரசு இம்முடிவை நடைபெற்ற ''உலக அளவில் கணிப்பொறித் தமிழ் ஏற்பு விழாவில்'' வெளியிட்டது.

ஒருங்கிணைந்த குறியீட்டு முறைகளும், தரப்படுத்தப்பட்ட விசைப் பலகையும் கணிப் பொறியின் தமிழ் பயன்பாட்டாளர்களிடத்தும், மென்பொருள் உருவாக்குபவர்களிடத்தும் சிறந்த வரவேற்பினைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து இதுவரை புழக்கத்தி லிருந்த பல்வேறு எழுத்துருக்கள் இந்தப் புதிய குறியீட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரே சீராக தரப்படுத்தப்பட்டன. இதைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய விசைப்பலகை இயக்கியை (Key Board Driver) கணித் தமிழ்ச் சங்கம் முனைப்புடன் செயல்பட்டு உருவாக்கியுள்ளது. தரப்படுத்தப்பட்ட எழுத்துக்களையும், விசைப் பலகையையும் நடைமுறையில் பயன்படுத்த வேண்டிய பணிகளை வெற்றிகரமாக முடித்து



இந்தப் படைப்புகளை கணித் தமிழ்ச் சங்கம் தமிழக அரசுக்கு அன்பளிப்பாக அளிக்கின்றது.

தமிழக அரசு இந்த மென்பொருளை அனைத்து கல்வி நிலையங்கள், அலுவலகங்கள், மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் செயல்படுத்த உள்ளது.

கணிப்பொறித் தமிழ் வளர்ச்சிக்கான அடுத்த கட்ட முயற்சியாக, தமிழிலேயே முழுமையாக செயல்படக் கூடிய மென்பொருள்கள் பல உருவாக்கப்பட்டு, பயன்படுத்தப்படுவதற்கு தயாராக உள்ளன. இது போன்ற தயாரிப்புகளில் கவிதா கணினி நிறுவனம், ''கலைஞர் 99 - கல்வியாளர்'' என்ற மென்பொருளினைத் தமிழக அரசுக்கு அன்பளிப்பாக வழங்குகின்றது. இம்மென் பொருள் கல்வி நிலையங்களுக்கு மட்டும் இலவசமாகப் பயன்பட வேண்டும் என்று அந்நிறுவனம் விழைகின்றது.

# ''கலைஞர் 99 - கல்வியாளர்''

இம் மென்பொருள் சொல்லாக்கச் செயலுக்கு (Word processing) மட்டுமின்றி, தமிழில் பிழையற்ற நூலாக்கப் பணிகளில் பயன்படவும், மின் அஞ்சல், இணையம் போன்றவற்றில் செயல்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி ஆண்டில் சுமார் 700 மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறிக் கல்விப் பயிற்சி அளிக்கும் திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தில், கணினித் தமிழும் ஒருங்கிணைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். அதே சமயம், கணினி உள்ள மற்ற கல்வி நிலையங்களுக்கும் இம் மென்பொருள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

சாதிச் சண்டைகளை ஒழித்து சாதி மத பேதமற்ற சமத்துவ சமுதாயம் அமைந்து மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல தமிழ்நாட்டில் 29, 30ஆவது பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் நாமக்கல் மாவட்டம் சிறுமொளசி மற்றும் அத்தனூர் ஆகிய இடங்களில் 17.6.99 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம் கருங்குளம் மற்றும் வேதாளையில் 31, 32ஆவது பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 25.6.99 அன்றும், 33 மற்றும் 34ஆவது சமத்துவபுரங்கள் விருதுநகர் மாவட்டம் பாட்டக்குளம் சல்லிப்பட்டி, சம்மந்தபுரம் மற்றும் 35ஆவது சமத்துவபுரம் தூத்துக்குடி மாவட்ட லிங்கப்பட்டி ஆகிய இடங்களில் 26.6.99 அன்றும், 36ஆவது சமத்துவபுரம் 27.6.99 அன்று

# 'அனைவரும் ஒரே குலம்' என்ற உயர்ந்த கீதத்தை ஓங்கி ஒலிக்கும் சமத்துவபுரங்கள்

கன்னியாகுமரி மாவட்டம் கலிங்கராஜபுரத்திலும் 37,38ஆவ்து சமத்துவபுரங்கள் வேலூர் மாவட்டம் அம்மூர், பெரும்புலிப்பாக்கத்தில் 30-6-1999 அன்றும் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. அவ்விழாக்களில் அவர் ஆற்றிய உரைகளிலிருந்து...


### *சிறுமுளசி – அத்தனூர் சமத்துவபுரங்கள்*

"பொதுவாக நான் ஏதோ பெரிய சிந்தனையாளன், தீர்க்கதரிசி, தொலைநோக்குப் பார்வை உடையவன், ஒரு இடத்திலே உட்கார்ந்து தவசிகளைப் போல, முனிவர்களைப் போல சிந்தித்து – இந்தத் திட்டங்களை எல்லாம் ஞான திருஷ்டியால் கண்டுபிடித்து மக்களுக்கு நிறைவேற்ற வேண்டும் என்று செயல்படுத்தக்கூடியவன் அல்ல.

நான் ஒரு சாதாரண, சாமான்ய, பாமர மனிதரின் பட்டியலில் இருக்கக் கூடிய ஒருவன்தான். உங்களிலே பலரைப் போல – இந்தத் தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் ஒரு சின்னஞ்சிறிய ஊரிலே ஒரு சாதாரணக் குடும்பத்திலே பிறந்தவன்தான் நான். ஆனால் என்னுடைய ஆட்சியிலே எந்தத் திட்டமானாலும், எந்த செயல்பாடு ஆனாலும் அவைகள் எல்லாம் நான் கண்டவை, உணர்ந்தவை – இவைகளின் காரணமாக இன்றைக்கு நடைபெறுகின்றனவே அல்லாமல் வேறல்ல.

அதைப்போலவே ஜாதி–மத பேதங்கள் இல்லாத ஒரு அமைதியான நிலை பட்டித்தொட்டியெங்கும் பரவ வேண்டும் பட்டினக்கரை வரை அது விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் என்ன செய்யலாம் என்று யோசித்து, தந்தை பெரியார் சொன்னார். அதை இயக்கமாகவே நடத்திச் சொன்னார். அறிஞர் அண்ணா எழுதிக் காட்டினார். பேசிக்காட்டினார். உத்தமர் காந்தியடிகள் சொன்னார். பெருந்தலைவர் காமராஜர் சொன்னார். டாக்டர் அம்பேத்கர் சொன்னார். ஆனால் அவர்களெல்லாம் பிரச்சார அளவில் செய்த அந்த காரியத்தைச் செயல்படுத்தினால் என்ன என்று செயல்படுத்துகின்ற திட்டம்தான் இன்றைக்கு இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் என்பதை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த சமத்துவபுரத்தில் யார் யார் வாழ்கிறார்கள். ஒன்றாக இருந்து வாழமாட்டோம் என்று மறுத்தவர்கள் ஆண்டவன் படைப்பிலே நீ ஒரு ஜாதி, நான் ஒரு ஜாதி, நீ உயர்ந்தவன், நான் தாழ்ந்தவன், அல்லது நீ தாழ்ந்தவன். நான் உயர்ந்தவன் என்று பேசி தினம் தினம் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் நாய் நுழையலாம், பன்றி நுழையலாம். ஆனால் மனிதர்கள் தெருவிலே நுழையக் கூடாது என்கின்ற அளவிற்கு வேதனையை தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு ஒன்றாகச் சேர்ந்து இணைந்து வாழ வேண்டும். அதற்கான வசதிகளை நாங்கள் செய்து தருகிறோம் என்று தொடங்கப்பட்டதுதான் தந்தை பெரியார் பெயரால் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டமாகும்.



ஜாதிமத பேதங்கள் ஒழிந்தாக வேண்டும். "இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கிறது என்பானும் இருக்கின்றானே" என்று பாரதிதாசன் வருத்தப்பட்டாரே, அந்த வருத்தம் போக்கப்பட வேண்டும். "சாதிகள் இல்லையடி பாப்பா குலம் தாழ்த்தி உயர்ச்சிச் சொலல் பாவம்" என்று பாரதியார் உருக்கமாகச் சொன்னாரே அந்த பாரதியாருடைய எண்ணம் பலித்திட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நூறு வீடுகள் இங்கே அமைகின்றன.

### கருங்குளம் – வேதாளை சமத்துவபுரங்கள்

நல்ல திட்டங்கள் நிறைவேற, நல்ல திட்டங்கள் மக்களுக்குப் பயன்பட செலவழிக்கின்ற நிதி மக்களுக்குப் போய்ச் சேர நிர்வாகத்தில் ஊழல் இல்லாமல் இருக்க வேண்டும். அடுத்து நிர்வாகம் ஒழுங்காக நடைபெற அமைதியான சூழல் இருக்க வேண்டும். இரண்டும் முக்கியமானவை.

ஒன்று, ஊழல் இல்லாமல் இருக்க வேண்டும். மற்றொன்று சூழல் நன்றாக இருக்க வேண்டும். இந்தச் சூழல் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சமத்துவபுரத்தை இன்றைக்கு நாம் அமைத்துக் கொண்டு வருகிறோம். இன்று இரண்டு சமத்துவபுரங்கள் இங்கே திறக்கப்பட்டிருக்கின்றன. நூறு, நூறு இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே முப்பது சமத்துவபுரங்களைத் திறந்து வைக்கின்ற அரும் பேற்றினை நான் பெற்றிருக்கின்றேன். பெரியார் நினைவு சமத்துவபுரம் என்று அதற்கு பெயர் சூட்டியிருக்கிறோம்.

பல்வேறு சாதிகளாகப் பிரிந்து இருக்கின்ற மக்களை ஒரே இடத்தில் நூறு வீடுகளைக் கட்டி அதிலே 20 அல்லது 30 சாதிக்காரர்களைக் குடி அமரச் செய்து, இந்த சாதி வித்தியாசத்தை சாதி முரண்பாட்டை அல்லது வேறுபாட்டை அகற்றலாம் என்று கருதித்தான் சமத்துவபுரங்கள் இன்றைக்கு அமைக்கப் பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள். இதை ஒரு பெரும் கடமையாக, புனிதச் செயலாக, ஒரு பெரும் பேறாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதி செயல்படுகிறார்கள். அதைப்போலவே தான் இங்கேயும் நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் – ஏற்கெனவே இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்த இந்தப் பணிகளை இவர் இன்றைக்கு மிகச் சிறப்புற நிறைவேற்றி அதே உணர்வோடு, அதே ஆர்வத்தோடு செயல்பட்டிருப்பதைக் கண்டு நான் அவரைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இங்கே குடி அமருபவர்களில் பிராமணர்கள் இருக்கிறார்கள், ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள். பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். மிகவும் பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்த செட்டியார், முதலியார் இவர்கள் இருக்கிறார்கள். இப்படி பல்வகையில் பல்வேறு சாதிக்காரர்கள் இன்றைக்கு இந்த வீடுகளிலே வாழ்கிறார்கள். அவர்கள் அண்ணன் தம்பி என்கின்ற அந்த உறவோடு சகோதர பாசத்தோடு வாழ்வதற்கு இந்தச் சமத்துவபுரம் நிச்சயமாக பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

### பாட்டாக்குளம் சல்லிப்பட்டி – சம்மந்தபுரம் சமத்துவபுரம்

சமத்துவபுரம் முதன் முதலாக வடார்க்காடு மாவட்டத்தில் பொய்கை என்ற இடத்தில் தொடங்கிய போது எங்களுக்கு ஒரு பெரிய சந்தேகம் இருந்தது. எல்லோரும் ஓர் குலம் என்பதை ஒத்துக்கொண்டு பிராமணர்கள், வைஸ்யர்கள், செட்டியார்கள், முதலியார்கள், நாடார்கள், வன்னியர்கள், முக்குலத்தோர், ஆதிதிராவிடர் இவர்கள் எல்லாம் ஒரே இடத்தில் வாழ்வதற்கு முன்வருவார்களா? அதற்கான விண்ணப்பங்கள் வருமா? என்று நான் சந்தேகப்பட்டது உண்டு.

முதல் சமத்துவபுரத்திலே சற்று தயக்கம் இருந்தது. ஆனாலும் கூட கடைசியாக நூறு வீடுகளுக்கும் விண்ணப்பங்கள் வந்து அதிலே தகுதிபடைத்தவர்கள் அங்கே தங்க அனுமதிக்கப்பட்டார்கள். இன்று என்ன நிலைமை என்றால் நூறு வீடுகள் கட்டி இருக்கின்றோம் என்றால் நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் கிருஷ்ணன் அவர்கள் பெருமுயற்சியினால் நூறு வீடுகள் கட்டப்பட்டது என்றால் இதற்காக 200, 300 விண்ணப்பங்கள் இன்றைக்கு வருகின்ற அளவிற்கு அவ்வளவு கிராக்கி – சமத்துவபுர வீடுகளுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இதிலே அவர்கள் வீடு கிடைக்கவில்லை என்பதற்காக வைவார்கள் என்று தயவு செய்து யாரும் கருதக்கூடாது. நாமெல்லாம் ஒன்றாக வாழ வேண்டும், உடன்பிறப்புகளாக வாழ வேண்டும். சகோதர, சகோதரிகளாக வாழ வேண்டும் என்கின்ற அந்த எண்ணம் இன்றைக்கு முகிழ்த்திருக்கின்றது, வளர்ந்திருக்கின்றது. அதன் காரணமாகத்தான் இன்றைக்கு இங்கே இரண்டு சமத்துவ



புரங்களை நான் திறந்து வைக்கின்றேன் என்றால் அதிலே வாழ்கின்றவர்கள் யார் என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

பாட்டாக்குளம் சல்லிப்பட்டியில் யார் யார் குடியிருக்கின்றார்கள் என்றால் நூறு வீடுகளில் 40 பேர் தாழ்த்தப்பட்டவர்கள். அவர்களிலே கூட இரண்டு மூன்று பிரிவுகள் உண்டு. அருந்ததியர்,, குதிரை வண்ணார், பறையர், கொண்டையான், பள்ளர் என்றெல்லாம் அதிலே பல பிரிவுகள் சொல்லப்பட்டு உள்ளது.

நான் அந்தப் பிரிவுகளையெல்லாம் ஏற்றுக் கொள்பவன் அல்ல. இருந்தாலும் இப்படிச் சொல்லப்படுகின்ற 40 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் இந்த நூறு வீடுகளிலே இன்றைக்கு வாழத் தொடங்குகிறார்கள். 26 பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். அதிலே நாடார் 7 பேர், இஸ்லாமியர் ஒருவர், யாதவர் ஒருவர், வாணியச் செட்டி ஒருவர், படுகர் 4 பேர், கம்மாளர் மூன்று பேர், வீரக்குடிவெள்ளாளர் 4 பேர், நாயுடு ஒருவர், புரவலர் இருவர், சின்னத்துப்பிள்ளை ஒருவர், கிறிஸ்துவப் பறையர் ஒருவர், மூக்கர் ஒருவர். மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் 24 பேர், இவர்களுக்கு இங்கே வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன. அதிலே மறவர் 15 பேர், நாயக்கர் 2 பேர், பண்டாரம் இரண்டு பேர், வலையர் ஒருவர், தொட்ட நாயக்கர் ஒருவர், குலாளர் ஒருவர். இதர வகுப்பினர் என்று எடுத்துக் கொண்டால் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பத்து வீடுகளில் பிராமணர் 5 பேர், யார் வரமாட்டார்கள் என்று எண்ணினோமோ அவர்களில் 5 பேர் வந்து இருக்கின்றார்கள். வெள்ளாளர் 3 பேர், சைவ முதலியார் ஒருவர், கோவில்களில் பூஜை செய்கின்ற குருக்கள் ஒருவர். ஆக நூறு பயனாளிகள் இதில் குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். இதிலே தனிச் சிறப்பு என்னவென்றால் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களுடைய வாரிசு முத்தையா தாஸ் அவர்களுக்கும் இந்த நூறு வீடுகளிலே ஒரு வீடு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதைப் போலவே சம்மந்தபுரத்தில் 40 தாழ்த்தப் பட்டவர்களில் முதலிலே நான் குறிப்பிட்டது போல பள்ளர் 14 பேர், பறையர் 19 பேர், அருந்ததியர் 3 பேர், குதிரை வண்ணார் ஒருவர், புரவலர் ஒருவர், பழங்குடியினர் ஒருவர், பிற்படுத்தப்பட்டவர்கள் 25 பேரில் நாடார் 5 பேர், இஸ்லாமியர் 3 பேர், யாதவர் 3 பேர், வாணியச் செட்டி 3 பேர், படுகர் 2 பேர், சாலியர் 4 பேர், கம்மாளர் 3 பேர், முதலியார் ஒருவர், வீரக்குடி வெள்ளாளர் ஒருவர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 25 பேரில் வலையர் 13 பேர், நாவிதர் 6 பேர், படையாட்சி 2 பேர், யோகிஸ்வர்

2 பேர், வண்ணார் 2 பேர், பத்து பேர் இதர வகுப்பினர். இதில் சக்கலராஜா 5 பேர், பிராமணர் 4 பேர், வெள்ளாளர் ஒருவர். ஆக மொத்தம் நூறு பயனாளிகள் இந்த சம்மந்தபுரம் சமத்துவபுரத்திலே இன்றுமுதல் அவர்கள் வாழத் தொடங்குகிறார்கள்.

***லிங்கப்பட்டி சமத்துவபுரம்***

35–வது சமத்துவபுரம் பெரியார் நினைவு சமத்துவபுரம் இன்று இந்த மாவட்டத்தில் லிங்கம்பட்டியில் திறந்து வைக்கின்ற இந்த வைபவம் மிகவும் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த இனிய நிகழ்ச்சியில் 9 கோடியே 78 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 14 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 10 கோடியே 5 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 82 இலட்சத்து 71 ஆயிரத்து 900 ரூபாய் செலவில் 2,230 பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழுங்கப் படுகின்றன. அடையாளத் திற்காக, சிலருக்கு மேடையில் வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கெல்லாம் நிகழ்ச்சி முடிந்த பிறகு அதிகாரிகளால் வழங்கப்பட் இருக்கின்றன.

பயிற்சி பெற்ற நாற்பது கடல் பணியாளர்கள் உங்கள் முன்னிலையில் சான்றிதழ்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களை நாம் அனைவரும் வாழ்த்தி, இன்றைக்குப் புதிய பணிகளுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்க அனுப்புகின்ற நிகழ்ச்சியும் இன்றைய தினம் இந்த மேடையிலே இணைக்கப்பட்டு சீரோடும், சிறப்போடும் அதுவும் நடைபெற்றி ருக்கின்றது.

இந்த மாவட்டத்தில் இன்று திறக்கப்படுகின்ற லிங்கம்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் 35–வது சமத்துவபுரம் என்று நான் குறிப்பிட்டேன். நான் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு வசதிகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை கணக்கிட்டு, இந்த சமத்துவபுரங்கள் திறக்கப்படுகின்ற காரணத்தால் 35 என்ற அளவில் இவைகள் நிற்கின்றன.

கடந்த ஓராண்டுக்கு முன்பு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு தொடங்கப்பட்ட போது, இந்த இரண்டு ஆண்டுகளில் 150 சமத்துவபுரங்கள் கட்டப்படுமென்று அறிவித்தோம். மற்றவைகள் எல்லாம் ஆங்காங்குக் கட்டப்பட்டு நிறைவுற்றும், சில சமத்துவபுரங்கள் இன்னமும் நிறைவு பெறாமல் இருக்கின்ற காரணத்தாலும், நான் தொடர்ந்து தேதிகளை அவைகளுக்குத் தரமுடியாத காரணத்தாலும், 35–வது சமத்துவபுரத்தைத்தான் இன்றைக்கு திறந்து வைக்ககூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதற்காக நான் அமைச்சரவைக் கூட்டத்தை அண்மையிலே கூட்டி, எல்லா சமத்துவபுரங்களையும் திறப்பதற்கு நான் செல்வது இயலாத காரியமாக இருப்பதால், ஆங்காங்கு உள்ள மாவட்ட அமைச்சர்கள் அந்த சமத்துவபுரங்களைத் திறந்து வைக்கின்ற பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்த அமைச்சர்களோடு தொடர்பு கொண்டு, அந்த



சமத்துவபுரங்களுடைய திறப்பு விழாக்களும் தொடர்ந்து நடைபெறுமேயானால், இந்த ஆண்டு எஞ்சியுள்ள 60 அல்லது 65 சமத்துவபுர திறப்பு விழாக்கள் முடிவுறும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்ச்சமுதாயத்திலே சாதி பேதமற்ற, மத வேறுபாடற்ற, ஒரு நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும். அதனுடைய எடுத்துக்காட்டாகத்தான் தூத்துக்குடி லிங்கம்பட்டி சமத்துவபுரம் உருவாகியிருக்கின்றது.

வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாட்டிலே சாதியை உருவாக்கியவர்கள் பிராமணர்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால், எங்கேயாவது ஒரு பிராமணருக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சண்டை, மோதிக் கொண்டார்கள், இரத்தம் சிந்தினார்கள் என்று எங்கேயாவது செய்தி வருகிறதா? ஆனால் எப்படி செய்தி வருகிறது? தேவர்களும், ஆதிதிராவிடர்களும் மோதிக் கொண்டார்கள். தேவர்களும், தேவேந்திர குலத்தினரும் மோதிக் கொண்டார்கள். நாடார்களும், ஆதிதிராவிடர்களும் மோதிக் கொண்டாகள் என்றும், பிற்படுத்தப் பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் மோதிக் கொள்கிற செய்தியைத்தான் நாம் இன்றைக்கு நாட்டிலே கேள்விப் படுகிறோம்.



அதனால் தான், நான் மனம் புழுங்கி இங்கே சொன்னேன். ஏற்கெனவே, நான் எழுதிய "ஒரே இரத்தம்" கதையில், இந்த வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். "புராண காலத்தில் 'புலியும் - மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்ததாகச் சொல்வார்கள். இந்தக் காலத்தில் புலியும், மானும்கூட ஒரு துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாம். குறைந்த பட்சம் மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா?" என்று வேதனையோடு கேட்டிருக்கிறேன். இன்றைக்கு அந்த நிலை இருக்கிறது.

மானும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்க முடியவில்லை. அதாவது மிகவும் பிற்படுத்தப்பட்டவரும், ஒரு ஆதிதிராவிட குடிமகனும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்க முடியவில்லை. ஒன்றுபட்டவர்களாக வாழ முடியவில்லை.

***கலிங்கராசபுரம் சமத்துவபுரம்***

இந்த ஆட்சி எந்தவித சாதனையைச் செய்வதாக இருந்தாலும், அதை ஒரு அரசியல் கண்ணோட்டத்தோடு செய்வதில்லை. இதைச் செய்தால் என்ன ஆதாயம் நமக்கு என்ற கண்ணோட்டத்தோடு இல்லை. மொத்தச் சமுதாயம் எப்படியாவது முன்னேற வேண்டும். இந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள், ஏழை, எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள், நலிவுற்ற மக்கள் அத்தனை மக்களும் நல்வாழ்வு பெறவேண்டும் என்கின்ற அந்த உணர்வோடு தான் இந்த ஆட்சியின் சாதனைகள் இன்றைக்குத் தொடருகின்றன.

தி.மு.கழக ஆட்சியில் சமுதாய ரீதியான சமூக அடிப்படையிலான பல்வேறு திட்டங்கள் உண்டு என்றாலும் அவைகளில் ஒன்றுதான் இன்றைக்கு இங்கே தொடங்கி வைக்கப்படுகின்ற பெரியார் நினைவு சமத்துவபுர திட்டம். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும் பாடுபட்டது தமிழ்நாட்டில் சாதி மத வேற்றுமை கூடாது என்பதற்காக. மத நல்லிணக்கம், மனிதநேயம் இவைகள் பெருகிட வேண்டும் என்பதற்காக.

இந்த மண்ணில் மதவெறிக்கு இடம் அளிக்கக்கூடாது என்பது அவர்களுடைய முழக்கம். சாதிவெறி தலை தூக்கக்கூடாது என்பது அவர்களின் கனவு. அதை செயல்படுத்தத்தான் சமத்துவபுரங்கள் ஒரு நூறு இடங்களிலே எடுத்த எடுப்பில் தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டு இன்றைக்கு 36-வது சமத்துவபுரத்தை இங்கே நான் திறந்து வைத்திருக்கின்றேன்.

அய்யர், அய்யங்கார் முதல் ஆதிதிராவிடர் வரை நூறு பேர் ஒரே பகுதியிலே வாழ்கின்ற ஒரு உணர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இது பொருளாதார அடிப்படையில் அல்ல. அரசியல் அடிப்படையில் அல்ல. இது முழுக்க முழுக்க சமுதாய அடிப்படை. பெரியாரின் சமுதாயக் கொள்கைகள் வெற்றி பெறுகிற வகையில் அறிஞர் அண்ணாவின் சமுதாயக் கொள்கைகள் வெற்றி பெறும் வகையில் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.







*அம்மூர் – பெரும்புலிப்பாக்கம் சமத்துவபுரங்கள்*

சாதியின் பெயரால் நடைபெறுகின்ற கலவரங்கள், ரத்தம் சிந்துகின்ற நிகழ்ச்சிகள் இவைகளை வெறும் பேச்சால் வேறு சில காரியங்களால் மாத்திரம் தடுக்க முடியாது என்று பொருளாதார ரீதியிலும் அவர்களை ஒன்றாக அமர வைக்கின்ற சில சமூக சிந்தனைகளின் அடிப்படையிலும் இந்தச் சமத்துவபுரங்களை உருவாக்கலாமென்று திட்டமிட்டு முதற்கட்டமாக 100 சமத்துவபுரங்களை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்துவது என்று முடிவெடுத்து இன்றைக்கு 37, 38வது என்ற அளவிற்கு எண்ணிக்கை வந்துள்ளது.

இந்தச் சமத்துவபுரங்களின் பலன் சகோதரப் பாசம் உருவாகி, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலருடைய வாக்கு நம்முடைய தமிழ் மக்களுடைய இதயத்திலே பதிந்து எந்தச் சமத்துவத்திற்காக, சமதர்மத்திற்காக தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும் அண்ணல் அம்பேத்கார் போன்றவர்களும் ஈடுபட்டார்களோ அந்தச் சமத்துவத்தை செயல்மூலமாகக் காட்டுவதற்கு இந்தச் சமத்துவபுரங்கள் நிச்சயமாக பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கின்றது. ★

# கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு நினைவுக் கட்டடம்

வரலாற்றுச்சிறப்புமிக்க கன்னிமாரா நூலக நூற்றாண்டு நினைவுக் கட்டடம் ரூ.1.79 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நினைவுக் கட்டடத்தை 24.6.99 அன்று மாணபுமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் திறந்து வைத்தார். விழாவிற்கு தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக்குழு துணைத்தலைவர் திரு.முரசொலிமாறன் தலைமையேற்றார்.

அவ்விழாவில் பேராசிரியர் ஆற்றிய உரையிலிருந்து....






"கன்னிமாரா நூலக வாசகர்களின் எண்ணிக்கை இப்போது 60 ஆயிரமாக உள்ளது. இதனை ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டும்.

நூலகத்தின் பழைய

கட்டத்தைப் புதுப்பிக்க மத்திய அரசு ரூ.80.68 இலட்சமும் மாநில அரசு ரூ.40.52 கோடியும் மானியம் வழங்கியுள்ளன. இதன் மூலம் புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிராமம் தோறும் நூலகங்கள் தேவை. கிராமங்களில் நூலகங்களை அதிகப்படுத்த இயன்ற அளவில் அனைத்து நடவடிக்கை களையும் மாநில அரசு எடுத்து வருகிறது.

பொது நூலகங்களுக்கு நூலக வரியிலிருந்து ரூ.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதிய நூல்களை நூலகங்களுக்கு வாங்க அதன் விலையில் 15 சதவிகிதம் கழிவு தரவேண்டும் என்பதை அரசு ரத்து செய்துவிட்டது. தகுந்த விலையில் நூல்கள் கிடைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதேபோல் அனைத்து நூலகங்களுக்காக வாங்கப்படும் நூல் பிரதிகளின் எண்ணிக்கை 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது".

திரு. முரசொலிமாறன் தலைமையுரை யிலிருந்து...

''உலகின் அனைத்துப் பெரிய நூலகங் களுடனும் சென்னை கன்னிமாரா நூலகம் கணிப்பொறி இணைப்புப் பெற வேண்டும் குறிப்பாக, இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், அமெரிக்காவின் முக்கியப் பல்கலைக் கழகங்களுடன் கம்ப்யூட்டர் ஆன்லைன் இணைப்புப் பெறவேண்டும்.

அதிக இடத்தேவையும் பணத்தேவையும் இன்றி நவீன நூல்நிலையங்கள் அமைக்கப் படுகின்றன. இதற்குக் காரணம், பல்வேறு தகவல்களைப் பதிவுசெய்து வைக்கும்கம்ப்யூட்டர் 'சிடி ராம்'. கன்னிமாரா நூலகத்திலும் இது இடம் பெற வேண்டும்.

விழாக்களில் விருந்தினர்களுக்கு மாலை அணிவிப்பதற்குப் பதில் நூல்களைப் பரிசளிக்கும் பழக்கம் வர வேண்டும். இதனால், புத்தக வெளியீட்டாளர்களுக்கு நலன் ஏற்படுவதோடு, சிறந்த புத்தகங்களும் பரிமாறப்படும்".

சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பரிதி இளம்வழுதி, சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுத் தலைவர் திரு.சா.கணேசன், தொழிலதிபர் திரு.நல்லி குப்புசாமி செட்டி, நூலகர் திரு.நடராசன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ★

**தமிழரசு இதழின் விலை**

**1-7-1999 முதல் ரூ.5 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**ஆகவே, தமிழரசு**

**தமிழ் இதழின் ஆண்டுச்சந்தா : ரூ.120**

**6 மாதச் சந்தா : ரூ.60**

**தமிழரசு ஆங்கில இதழின்**

**ஆண்டுச்சந்தா : ரூ.60**

# தொழில்நுட்பப்

இந்த பல்தொழில் நுட்பப் பயிலகம் தம்பி மாறன் அவர்களுக்கு நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட தொகையில், மாறன் முன்வந்து 75 இலட்ச ரூபாயை இந்தப் பயிலகத்திற்காக வழங்குவதாகக் கூறி, அருமை நண்பர் ஆற்காடு வீராசாமி அவர்களுடைய தொடர் முயற்சிகளின் காரணமாகவும், அதற்கான அரிய ஆலோசனைகளை பேராசிரியர் வழங்கியதின் காரணமாகவும் எந்த இடத்திலே இந்த பயிலகத்தைத் தொடங்குவது என்ற அவர்களுடைய இடத்தேர்வுக்கு உதவுகின்ற வகையில் சென்னை மேயர் தம்பி ஸ்டாலினும் மாநகராட்சி மன்றத்தின் ஆணையர் திரு.கோலப்பனும் துணை நின்று அவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல - குப்பை மேடாக இருந்த ஒரு இடத்தை இன்றைக்கு செம்மைப்படுத்தி இங்கே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்களே, உங்களுக்கு அந்த இடம் தெரியாது; மேடையிலே இருக்கின்ற எங்களுக்கு அந்த இடம் எங்கே இருக்கிறது என்று தெரிகிறது.

## அண்ணா சொல்லும் தத்துவம்

இந்தக் குறுகிய சந்து பகுதியைக் கடந்து சென்றால் அங்கேயிருக்கின்ற பரந்த வெளிதான் அந்த இடம். அந்த இடம் பண்படுத்தப்பட்டு ஒரு அருமையான பயிலகம் பளபளப்பான கட்டிடத்தோடு வெகு விரைவில் இன்னும் இரண்டு அல்லது மூன்றாண்டு காலத்தில் முழுமை பெற்று இந்த வட்டாரத்திலே உள்ள ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் பயன்படப் போகிறது என்பதை எண்ணும்போது என்னுடைய இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. மாறன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்று சொல்வார்கள். ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கின்றான். அவனைத் தேடி வேறு எங்கும் அலைய வேண்டியதில்லை, அவனைக் காண வேண்டுமென்றால், ஏழை சிரித்தால் அங்கே இறைவன் இருக்கிறான் என்று பொருள் என்ற தத்துவத்தை அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

அவர்கள் சட்டமன்றத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்று 2 ஆண்டு காலம்தான் பணியாற்றினார் என்றாலுங்கூட அந்த இரண்டாண்டு காலத்தில் அவர் உதிர்த்த வாசகங்கள் பல பல. ஒரு முறை நிதி நிலை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது அண்ணா தமிழகத்திலே உள்ள ஏழை எளிய மக்கள், சாதாரண சாமன்ய மக்கள், பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் - இவர்களைச் சுற்றித்தான் - இவர்களை மையமான - வைத்துத்தான் என்னுடைய ஆட்சிக் சக்கரம் சுழலுமென்று குறிப்பிட்டார்.

அண்ணா எண்ணியவாறு இந்த ஆட்சிச் சக்கரத்தை சுழல விட வேண்டுமென்பதற்காகத்தான் அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்று சூளுரைத்து அண்ணாவின் மறைவிற்குப் பிறகு தொடர்ந்தும் ஐந்தாறு ஆண்டுக்காலம். அதற்குப் பிறகும் விட்டு விட்டும் சில ஆண்டுக்காலம் - இப்போது மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து இந்த ஆட்சியை உங்களுடைய ஆதரவோடு நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆட்சியினுடைய சாதனைக்ள் எவையெவை - எதைக்காட்டி இந்த ஆட்சியாளர்கள் மக்களைச் சந்திக்கப் போகிறார்கள் என்ற சந்தேகத்தையெல்லாம் சில பேர் அறிக்கை வாயிலாக வடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

## எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு மகத்தான சாதனைகள்

எனக்குள்ள கவலையெல்லாம் இவ்வளவு சாதனைகளிலே எதை குறிப்பாகச் சொல்லி மக்களிடத்தில் ஆதரவு கேட்பது என்பதுதான். அவ்வளவு சாதனைகளை என்னாலேயே எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு, அவ்வளவு சாதனைகளை கழக ஆட்சியில் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி செய்திருக்கிறோம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலாவது தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியிலே எல்லோருக்கும் இலவச மின்சாரம் என்று அறிவித்தோமே, நமக்கு முன்பு எந்த மாநிலத்திலாவது அது அறிவிக்கப்பட்டதுண்டோ? இல்லை. தமிழகத்திலேதான் இலவச மின்சாரத்தை அறிவித்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம். அடுத்த கடந்த ஆண்டு பஞ்சாபிலே அந்த முயற்சி நடைபெற்றிருக்கின்றது. அது எந்த அளவிற்கு நடைபெறுகின்றது எனக்குத் தெரியாது.

அதைப் போலவே இங்கே உள்ள பெரியவர்களுக்கும், நடுத்தர வயது உள்ளவர்களுக்கும் தெரியலாம். முதியோர் அறிவீர்கள்; ஆனால் இளையோர் பலர் அறிய மாட்டீர்கள். இந்த சென்னை மாநகரில் மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கைரிக்ஷா ஓடியதே, அது இங்கே அமர்ந்திருக்கின்ற உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? 1972ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த போது மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் இந்தக் கொடுமையை அகற்ற வேண்டுமென்று திட்டமிட்டு அந்த கைரிக்ஷாக்களை ஒழித்து விட்டால் அதை இழுக்கின்ற தொழிலாளி என்ன ஆவான் என்பதையும் தொலை நோக்கோடு சிந்தித்து அவர்களுக்கெல்லாம் இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும் என்று அறிவித்து, சென்னை மாநகரத்திலும் மற்றும் மதுரை, கடலூர் போன்ற வேறு சில பகுதிகளிலும் இருந்த கைரிக்ஷாக்களையெல்லாம் ஒழித்து அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக நிறைவேற்றிய ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

ஆனால் இன்று வரையிலே - இன்றைக்கும் நீங்கள் கல்கத்தாவிற்கு சென்று பார்த்தால் - மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கைரிக்ஷா ஓடிக் கொண்டிருக்கிறது. கல்கத்தா மேற்கு வங்கத்தின் தலைநகரம். மேற்கு வங்கம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் மிகச் சிறந்தவரான தோழர் ஜோதிபாசு அவர்களை முதலமைச்சராகக் கொண்டு ஆட்சி நடத்தப்படுகின்ற மாநிலம். இன்னமும் இருபதாயிரம் கைரிக்ஷாக்கள் கல்கத்தா மாநகரில் இழுத்துக் கொண்டிருக்கிறார்கள் மனிதர்கள்.

**நம்முடைய சாதனைகள்**
**சமூக ரீதியான சாதனைகளும் கூட**

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் - நம்முடைய சாதனைகள் வெறும் அரசியல் ரீதியானவை மாத்திரமல்ல, வெறும் பொருளாதார ரீதியானவை மாத்திரமல்ல; சமூக ரீதியான சாதனைகள். நான் சிலவற்றைப் பார்த்து அதனால் உணர்வு பெற்று அந்த உணர்வை செயல்படுத்த வேண்டும் என்று கருதுகிற காரணத்தால்தான் எங்களால் பல சாதனைகளை சமுதாய ரீதியாக தமிழகத்திலே செயல்படுத்தப்பட முடிந்திருக்கின்றது.

எனக்கு கண் நோய் வந்தது. சிகிச்சை பெற அமெரிக்கா சென்றிருந்தேன். அங்கே நான் கேள்விப்பட்டேன். என்னோட வந்த டாக்டர் வேங்கடசாமி அவர்கள் அங்கும் இங்கும் சென்று சில தகவல்களைக் கொண்டு வந்தார். அங்கெல்லாம் கிராமப் பகுதிகளிலே இயலாதவர்களுக்கு, ஏழையெளியவர்களுக்கு இலவசமாகக் கண் அறுவை சிகிச்சை நடத்தப்படுகிறது. கண்ணொளி வழங்கப்படுகிறது. முகாம்கள் நடத்தப்படுகின்றன என்ற செய்தியைச் சொன்னார். அப்பொழுது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக பேராசிரியர் இருந்தார். அவரிடத்திலே அதைப்பற்றி விவாதித்து உடனடியாக தமிழகம் முழுவதும் இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்களுக்கு கண் அறுவை சிகிச்சை இலவச மூக்குக் கண்ணாடி வழங்குகின்ற திட்டம் நிறைவேற்றப்பட்டன. இன்னமும் தொடர்ந்து அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வருகின்ற ஜூலை 2ஆம் தேதி கூட பூவிருந்தவல்லியில் கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இன்று பிற்பகல் என்னைச் சந்தித்துக் கேட்டார். வரவேண்டுமென்று கேட்டார். நானும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் கலந்து கொள்ள வேண்டுமென்றார். இப்படி இன்று வரையில் கண்ணொளி திட்டத்தை இந்தியாவிலே இந்த அளவிற்கு பரந்த அளவில், விரிந்த முறையில் நடத்திக் கொண்டிருப்பது தமிழகத்திலே இந்த ஆட்சிதான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களுக்கு - ஏழையெளிய பெண்களுக்கு - அவர்களுடைய வறுமை நிலையை எண்ணிப் பார்த்து - அவர்கள் அதே நேரத்தில் படிப்பறிவும் பெற்றிருக்க வேண்டுமென்பதற்காக பத்தாவது வரை படித்த பெண்களுக்கு - திருமண உதவியாக பத்தாயிரம் ரூபாய் என்று அறிவித்து இதுவரையில் அதற்காக பல கோடி ரூபாய் - இந்த ஆண்டு மாத்திரம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 60 கோடி ரூபாய். சென்ற ஆண்டு அறுபது கோடி ரூபாய். இப்படி ஏழையெளிய பெண்களுக்கு திருமணத்தை நடத்தி வைப்பதிலே கூட அக்கறை என்றால் இவைகள் எல்லாம் சமுதாய அடிப்படையிலே, சமூக அடிப்படையிலே செய்யப்பட்ட சாதனைகள் ஆகும்.



மற்ற சாதனைகள் நூறாண்டு காலத்திற்கு மேலாக தூர் வாரப்படாமல் இருந்த காவிரியாற்றுப் படுகைகள் எல்லாம் தூர்வாரப்பட்டு காவிரியாற்றின் வாய்க்கால்கள், வடிகால்கள், கொள்கால்கள் இவைகள் எல்லாம் தூர் எடுக்கப்பட்டு - வருகின்ற தண்ணீர் முழுமையாக வயலுக்கு கிடைக்கக் கூடிய அளவிற்கு வகைப்படுத்தியிருக்கிறோம் என்றால் அதற்காக முதல் ஆண்டு

பத்து கோடி, இரண்டாம் ஆண்டு 20 கோடி, இந்த ஆண்டு ஐம்பது கோடி ரூபாய் அளித்திருக்கிறோமென்றால் நூறாண்டு காலம் நடைபெறாத காரியத்தை நாம் நடத்தி முடித்திருக்கிறோம்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். என்னென்ன சாதனைகள் எவையெவை என்று, ஆனாலுங்கூட, இந்தச் சாதனைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இந்தியாவிலேயே முதன் முதலாக குடிசைகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை தி.மு.கழக ஆட்சிதான் 71ஆம் ஆண்டு இங்கே தொடங்கியது. ஆதிதிராவிடர்களுக்கு இலவச காங்கிரீட் வீடு கட்டித் தரும் திட்டத்தை இந்தியாவிலே யாரும் தொடங்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் இங்கே தொடங்கியது.

இப்படி ஏழையெளிய மக்களுக்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நலிவுற்ற மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகின்ற அதே நேரத்தில் இவைகளையெல்லாம் மக்களிடத்திலே மறைப்பதற்காக இன்றைய தினம் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் சில கருத்துக்கள் கற்பனையான கருத்துக்கள் - அவர்களுக்கெல்லாம் தி.முக. அரசு எதுவும் செய்யவில்லை என்ற கருத்துக்கள் இன்றைக்கு நடமாட விடப்படுகின்றன.

காலையிலே கூட ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலித் மக்களுக்கு எந்த உயர்வும் இல்லை, எந்த அந்தஸ்தும் இல்லை. அவர்களுக்கு உத்தியோகங்களிலே நல்ல வாய்ப்பு இல்லை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தலித் மக்களை அதாவது ஆதிதிராவிட மக்களை பழி வாங்குகிறது என்றெல்லாம் கூட யாரோ சொல்ல அதை பத்திரிகைகள் பெரிதுபடுத்தி வெளியிட்டுள்ள செய்திகளைக் கண்டேன்.

### அரசின் முக்கிய பொறுப்புக்களில் ஆதிதிராவிட சமுதாயத்தினர்

இன்றைக்கு தமிழகத்தை ஆளுகின்ற தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருப்பவரே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் தான், முதலமைச்சருக்கு அடுத்தபடியாக, அமைச்சர் வரிசையிலே இல்லாவிட்டாலும், அதிகாரிகள் வரிசையிலே இருக்கின்ற ஒரு பெரிய அதிகாரி, எல்லா செயலாளர்களுக்கும் தலைமைச் செயலாளர் முத்துசாமி, ஐ.ஏ.எஸ். அவர்களாகும்.

அடுத்து, மிக அத்தியாவசியமாக மக்களுக்குத் தேவையானது உணவு. அந்த உணவுத் துறையின் செயலாளர் ராமு, ஐ.ஏ.எஸ். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். நம்முடைய வீராசாமி அவர்களின் மக்கள் நல்வாழ்வுத்துறை, உணவு இருந்தால் மாத்திரம் போதாது, நல்ல சுகாதாரமும் தேவை, ஆரோக்கியமும் தேவை, உடல் நலமும் தேவை. அந்த நல்வாழ்வுத் துறைக்குச் செயலாளர் யார் என்றால், விஸ்வநாதன், ஐ.ஏ.எஸ். அவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இங்கே கல்வித் துறையின் சார்பாகத்தான் இந்த பயிலகத்தின் கட்டிட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த உயர்கல்வித் துறைக்குச் செயலாளர் யார் என்றால், செல்வம், ஐ.ஏ.எஸ். அவரும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

வீட்டு வசதித்துறை - ஒரு சாதாரண பிரஜையின் தேவை உணவு, உடை, உறையுள். இந்த உறையுள் என்று கூறப்படும் வீடுகளுக்கு - வீட்டு வசதித் துறைக்குச் செயலாளர் யார் என்றால் கோவிந்தன், ஐ.ஏ.எஸ். அவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்தான். சென்னை மாநகரத்தில் போலீஸ் கமிஷனர் காளிமுத்து, ஐ.பி.எஸ். அவர் யார் என்றால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். பலரை உத்தியோகங்களுக்கு இன்றைக்கு தேர்ந்தெடுக்கின்ற பப்ளிக் சர்வீஸ் கமிஷன் - தேர்வாணையம் - அதனுடைய தலைவர் முருகராஜ் - அவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். மாநகராட்சி மன்றத்தின் ஆணையர் கோலப்பன், ஐ.ஏ.எஸ். அவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். அவர் கொடுத்த கோலப்பன் கமிஷன்தான் விவசாயிகளுடைய குறைந்தபட்ச கூலியை நிர்ணயம் செய்து அந்த அறிக்கையின் பரிந்துரையை சட்டப் பேரவையிலே வைத்து - அனைவரும் வரவேற்று ஏற்றுக் கொண்ட அந்த அறிக்கையை தந்த கோலப்பன் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

### ஆதிதிராவிடர்களுக்கான அரசின் சாதனைகளை மூடிமறைப்பவர்கள் மூடர்களே

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜீவரத்தினம், ஐ.ஏ.எஸ். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் தயானந்த் கட்டாரியா தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் தான் இவ்வளவு ஏன்? என்னுடைய மருமகள் - அழகிரியின் மனைவி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இந்தச் சமுதாயத்தையெல்லாம் காட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகயெல்லாம் மூடி மறைத்து விடலாம் என்று எண்ணுகிறவர்கள் மூடர்களே தவிர, அதை நம்புகின்ற அளவிற்கு தமிழ்நாட்டு மக்கள் பைத்தியக்காரர்களாக இல்லை என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே நாங்கள் ஒரு கோடு கிழிப்பதானாலும் - ஒரு அங்குலம் நடப்பதானாலும் - இதனால் ஏற்படுகின்ற பயன் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை, நலிந்த மக்களைச் சென்றடைகிறதா என்ற கேள்விக்கு சரியான பதில் கிடைத்தால்தான் ஒரு அங்குலம் நாங்கள் அடியெடுத்து வைப்போம் என்பதை இந்த மாபெரும் கூட்டத்தில் நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிகழ்ச்சி அரசு நிகழ்ச்சிதான். நான் அரசியல் பேசவில்லை. அரசு சார்புடைய செய்திகளைத்தான் உங்களுக்குச் சொன்னேன்.

### மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் முன்னேற்றம்

கல்வித் துறையை எடுத்துக் கொண்டாலே இன்றைக்கு கல்வித்துறையின் ஒரு அங்கமாக இந்தப் பயிலகம் தம்பி மாறனுடைய உதவியோடு அவர் வழங்கிய 75 இலட்ச ரூபாயை முன்பணமாக வைத்து மேலும் பல கோடி ரூபாய் செலவழிக்கின்ற அளவிற்கு - இந்த ஆண்டே இந்தப் பயிலகத்திற்கான கருவிகளை இரண்டு கோடி அளவிற்கு வாங்கத் திட்டமிட்டு 2 அல்லது 3 ஆண்டுக் காலத்தில் கட்டிடத்தை முடித்து இந்த வட்டாரத்திலே மிகச் சிறந்த பயிலகமாக இந்தப் பயிலகத்தை நாம் உருவாக்கவிருக்கின்ற

இந்தக் கால கட்டத்தில் கல்வித்துறை, மேயர் இங்கே குறிப்பிட்டதைப் போல இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் எந்த அளவிற்கு முன்னேற்றத்தோடு எந்த அளவிற்கு விரிவாக மக்களுடைய தேவைகளை உணர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதை நான் ஒரு ஒப்பீடு மூலம் விளக்க விரும்புகிறேன்.



## தாலாட்டு

"நீதி தெரியும் என்பார் நீள்கரத்தில் வாளேந்திச் சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலேற்ற வந்த களிரே"

- என்று ஆண் குழந்தைக்கும்

"வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டாய் விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி"

- என்று பெண் குழந்தைக்கும்

தாலாட்டு பாடி மகிழ்கிறார் புரட்சி கவிஞர் பாரதிதாசன்.

ஐந்தாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 450. இந்த மூன்றாண்டு காலத்தில் கழக ஆட்சியில் நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 31 ஆயிரத்து 108 ஆசிரியர்கள். நடப்பாண்டில் 1999-2000இல் மேலும் 8 ஆயிரம் ஆசிரியர்களை நாம் நியமிக்கவிருக்கிறோம்.

5 ஆண்டுக் கால அந்த ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 838. இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 420. 5 ஆண்டு கால ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 843. ஆனால் இந்த 3 ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 2,385.

சிறப்பாசிரியர்கள் - உடற்கல்வி ஆசிரியர், தொழில் ஆசிரியர், கலை ஆசிரியர் ஆகியோர் - சிறப்பாசிரியர் என்று சொல்லப்படுவார்கள். இந்த நியமனம் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் ஒருவர் கூட இல்லை. ஆனால் இந்த 3 ஆண்டுக் கால கழக ஆட்சியில் 1,332 உடற்கல்வி ஆசிரியர்களையும், 614 கலை ஆசிரியர்களையும் நியமனம் செய்திருக்கிறோம்.

முந்தைய ஐந்தாண்டுகளில் உருவாக்கப்பட்ட புதிய தொடக்கப் பள்ளிகள் 531. இந்த மூன்றாண்டுகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் 953. தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தியது என்று பார்த்தால், முந்தைய 5 ஆண்டுகளில் 126 பள்ளிகள், இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் 462 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன.

முந்தைய 5 ஆண்டுகளில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியது 137. இந்த 3 ஆண்டுகளில் 319 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. முந்தைய 5 ஆண்டுகளில் 85 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டது. இந்த 3 ஆண்டுகளில் 250 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

### 5 ஆண்டுக்காலம் நடந்த ஆட்சிக்கும் 3 ஆண்டாக நடைபெறும் ஆட்சிக்கும் வேறுபாடு

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கூடங்கள் கட்டியதை ஒப்பிட்டால் - முந்தைய ஐந்தாண்டுகளில் 43 பள்ளிகளில்தான் அறிவியல் கூடங்கள். அதற்கான செலவு 85 இலட்சம் ரூபாய். ஆனால் இந்த 3 ஆண்டுகளில் 662 பள்ளிகளில் அறிவியல் கூடங்கள். அதற்கான செலவு 39 கோடியே 9 இலட்சம் ரூபாய். அவர்களுக்கு அறிவியலைப் பற்றிக் கவலையில்லை. அறிவியல் வளர்ந்தால் மக்கள் புத்திசாலிகளாக ஆகிவிட்டால் அடிக்கிற கொள்ளையைப் பற்றியெல்லாம் கணக்கு கேட்பார்கள் என்பதற்காக அறிவியலைப் பற்றியே கவலைப்படவில்லை. இந்த அறிவியல் கூடங்களுக்கு ஆய்வுக் கருவிகள் கடந்த 5 ஆண்டுகளில் 90 பள்ளிகளுக்கு 85 இலட்சம் ரூபாய் செலவழித்து வாங்கப்பட்டன. இந்த 3 ஆண்டுகளில் 1204 பள்ளிகளுக்கு 5 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவழித்து ஆய்வுக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பீட்டை ஏன் சொல்கிறேன் என்றால் 5 ஆண்டுக் காலம் நடைபெற்ற ஆட்சிக்கும் 3 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகின்ற இந்த ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

அதனால்தான் நம்மை விரும்புவார்களா, ஏற்றுக் கொள்வார்களா என்ற ஆதங்கத்தோடு நான் பார்க்கின்றவர்கள் எல்லாம் கூட நம்மைத்தான் விரும்பவேண்டும் என்கின்ற அளவிற்கு நம்முடைய ஆட்சியின் செயல்பாடுகளால், சாதனைகளால் கவரப்பட்டிருக்கின்றார்கள். இந்த ஆட்சியின் சாதனைகளை போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள், நல்லவர்கள் பாராட்டுகிறார்கள், நடுநிலையாளர்கள் வாழ்த்துகிறார்கள், புகழ்கிறார்கள்.

*– சென்னை புரசைவாக்கத்தில் 23–6–1999 அன்று அரசு புதிய பல தொழில்நுட்பப் பயிலகக் கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*

# பாரதியாரின் பாப்பாப் பாட்டு

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் இணையற்ற கவிஞர் பாரதியார். பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்ப் பாடல்கள் பலவற்றை எழுச்சியுடன் பாடியவர். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை; தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ?" என்று பாரதியாரைப் பாராட்டுவார் பாவேந்தர் பாரதிதாசன். சமுதாயம், சமயம், மொழி, நாடு, எனப் பல்வேறு துறைகளிலும் தம் புலமைத் திறத்தை நிலைநாட்டியவர் பாரதியார்.

**நாளைய தலைவர்கள்**

"குழந்தைகள் கடவுளின் கரத்திலிருந்து ஊதிவிடப்பட்ட நட்சத்திரத் துண்டுகள்" என்றார் லாரி பேராடோ என்ற அறிஞர். குழந்தைகளுக்குப் பொருள் தேடி வைப்பதை விட, நல்ல பழக்கங்களைத் தேடி வைப்பதே உண்மைச் செல்வமாகும் என்றார் வாட்லி என்ற அறிஞர். "குழந்தைகளிடமிருந்து எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்" என்றார் காந்திஜி. "இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்; அவர்களைச் செம்மையாக வளர்க்க வேண்டியது அரசின் கடமை மட்டுமல்ல. எல்லா இந்தியக் குடிமக்களின் கடமையும் ஆகும்!" என்றார் ஜவஹர்லால் நேரு. குழந்தைகளைப் பற்றிச் சிந்திக்காத அறிஞர்களும் இல்லை; கவிஞர்களும் இல்லை. கவியரசர் பாரதியாரும் "பாப்பாப் பாட்டு" மூலம், குழந்தைகளுக்காகப் பல்வேறு கருத்துக்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். அவற்றை விரிவாக இங்குக் காண்போம்.

**ஒற்றுமை உணர்வு**

குழந்தைகள் – துள்ளும் வசந்தங்கள்; சுறுசுறுப்புக் காவியங்கள். சோம்பலுடன் அவர்கள் கைகுலுக்கலாமா..? கூடாது என்பதைத் தன் பாட்டின் தொடக்கத்திலேயே **'ஓடி விளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!"** என்று தெளிவுபடுத்துகிறார்.

குழந்தைகள் ஒருவரை ஒருவர் ஏசுகின்ற நிலையால் வேற்றுமை வளருகின்றது; ஒற்றுமை சீர்குலைகின்றது; நட்பு அகன்று நன்மனமும் திரிந்து நிற்கின்றது. இந்த நிலையிலிருந்து மீள வேண்டுமென்றால் குழந்தைகள் செய்ய வேண்டுவது என்ன...? "ஒரு குழந்தையை வையாதே பாப்பா!" – இதுதான் பாரதி காட்டும் வழி.

**எவ்வுயிரும் தம்முயிர்**

*"வைதாரைக் கூட வையாதே – இந்த*
*வையகமும் பொய்த்தாலும் பொய்யாதே*
*வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை*
*வீணிற் பறவைகள் மீதில் எய்யாதே!"*

– என்னும் மனிதநேயக் கருத்துக்களை அன்றைக்கே பாடினார் கடுவெளிச் சித்தர்.

பாரதியும் குழந்தைகளிடம் மனிதநேயம் மலர வேண்டும் என்பதை விரும்பினார். சின்னஞ்சிறு குருவிகள் எவ்விதக் கவலையுமின்றி வானில் சிறகடித்துப் பறக்கின்ற காட்சியைக் கண்டு மகிழ்ந்த அவர், குழந்தைகளும் அவற்றைப் போல் மகிழ்ச்சியுடனும் மலர்ச்சியுடனும் வாழ வேண்டும் எனக் கூறினார். 'சின்னஞ்சிறு குருவி போலே நீ திரிந்து பறந்து வா பாப்பா' என்பது அவர் பாடல் வரி.

சுதந்திர உணர்வுடன் இரக்க உணர்வும் ஜீவகாருண்யமும் குழந்தைகளிடம் பெருக வேண்டும் என நினைத்த பாரதியார், கொத்தித் திரியும் கோழியுடன் கூடி விளையாடுவதுடன், எத்தித் திருடும் காக்கைக்கும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.



*"கொத்தித் திரியும் அந்தக் கோழி – அதை*
*கூட்டி விளையாடு பாப்பா"*
*எத்தித் திருடும் அந்தக் காக்காய் – அதற்கு*
*இரக்கப் படவேணும் பாப்பா"*

– என்று பாடினார். இவ்வாறே பசு, நாய், குதிரை, ஆடு ஆகியவற்றையும் ஆதரிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குகின்றார்.

**டி.எஸ்.பாலு**

## மனதில் உறுதி வேண்டும்

'மனத்திண்மைத்தான் மனிதனை முன்னேறச் செய்யும் சூத்திரக்கயிறு' என்றார் சுவாமி விவேகானந்தர்.

"எண்ணிய முடிதல் வேண்டும்;
நல்லவே எண்ணம் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

– என்று பாடிய பாரதியார், குழந்தைகளும் அவற்றைப் போல் மகிழ்ச்சியுடனும் மலர்ச்சியுடனும் வாழ வேண்டும் என்று வேறொரு பாடலில் பாடிய பாரதியார், இளம் உள்ளங்களில் எதற்கும் அஞ்சாத துணிவு வேண்டும் என்பதைப் பாப்பாப் பாட்டில், 'துன்பம் நெருங்கி வந்த போதும் நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா!" என்று பாடினார்.

## நாட்டுப்பற்று

பிறந்த பொன்னாட்டையும், பிறப்பித்த தாயையும் காக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் முதல் கடமை அல்லவா... தேசபக்தி இருந்தால்தான் பண்பும் சமுதாய உணர்வும், சகோதர பாசமும் வளர முடியும் என்பதை பாரதி உணர்ந்திருந்தார். எனவேதான்,


*"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற– எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!"*

என்று பாடினார். மேலும் சொல்லில் உயர்வான தமிழின் சிறப்பையும் அதைத் தொழுது படித்திட வேண்டுவதன் அவசியத்தையும்

*"சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!"*

என்று அன்புடன் அறிவுறுத்துகின்றார்.





## சமரச உணர்வு

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறிய வள்ளுவரைப் போல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் வேறுபாடு குழந்தைகள் உள்ளத்தில் எழவே கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் பாரதியார். எனவேதான், சாதிகள் இல்லாத சமுதாயத்தின் உயர்வைக் கூறி, நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு, ஆகிய பண்புநலன்களைக் கொண்டுள்ளவர்கள் மேலோர் என்றார். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பதெல்லாம் உண்மையில்லை என்பதையும் கூறி சமத்துவ, சகோதரத்துவ உணர்வை விளக்கினார்.

*"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்த மதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்"*

*என்பன பாரதியின் இனிய வரிகள்.*

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். 'அன்பே சிவம்' என்றார் திருமூலர்.

பாரதியும்,

***"உயிர்களிடத்தில் அன்பு வேணும்"***

– என்று பாடினார். குழந்தைகள் பாரதியின் வழியைப் பின்பற்றி நடந்தால், நம்பிக்கையுள்ள தலைவர்களாக நாளை உருவாவது நிச்சயம்! ★

# உவமைக் காடு

தொல்காப்பியம், வீரசோழியம், தண்டியலங்காரம், மாறன் அலங்காரம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், குவலாயநந்தம் போன்ற இலக்கண நூல்கள் பலவும் கவிதையில் அமைய வேண்டிய உவமை அணியின் முக்கியத்துவத்தை நன்கு விளக்கியுள்ளன.

கவிதைகளில், ஒரு பொருளுக்குப் பல உவமைகளை அடுக்கிக் கூறும் உத்தி என்பது ஓர் அரிய கலையாகும். இக்கலையினால் ஒரு கவிஞரின் புலமைத் திறம் வெளிப்படுவதுடன், கவிதையில் அவர் கூறவந்த பொருளில் சிறப்பும்,. அப்பொருள் மீது கொண்ட அழுத்தமும் சிறப்பாக வெளிப்படுகின்றன. நம் தமிழ்க் கவிதையில் இத்தகு அடுக்கு உவமைகளை மிகுதியாகக் காணலாம்.

சிரிப்பும் களிப்பும் இல்லாத ஒருத்தி எவ்வாறு களை இழந்த உருவாய் இருக்கிறாள் என்பதை உணர்த்த முயன்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்,

***சிறகை இழந்த சிட்டுக்குருவி போலவும்***
***தந்தி அறுந்த வீணையின் தன்மை போலவும்***
***பசுமை மாறிய பயிரினம் போலவும்***

இருந்ததாக உவமைகளை அடுக்கிப் பாடினார்.

போர்க்களத்தில் வீரர்கள் போரிடும் காட்சியைப் புலவர் குழந்தை, தாம் இயற்றிய ஒரு பாடலில் விளக்க முற்படுகிறார். எப்படி...?

***புலியும் புலியும் மலைவன போன்றும்***
***மலையும் மலையும் சிலைவன போன்றும்***
***முகிலும் முகிலும் இகலுவ போன்றும்***
***இடியும் இடியும் இடிப்பன போன்றும்...***

எனப் போர்க் காட்சியினை, உவமை மாட்சி மூலம் இனிதே விளக்கினார்.

பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் தமது பாடல் ஒன்றில், ஒரு பெண் தன் வீட்டில் துணையாக ஒருவருமின்றி தனித்து நின்ற நிலையைப் பாட முனைந்தபோது, நிலவில்லா வானம், நீரில்லா ஆறு, சிலையில்லாக் கோயில் ஆகியவற்றை எடுத்துரைத்து தம் கருத்துக்கு வலிமை சேர்த்தார்.

கவிஞர் கண்ணதாசனும் அடுக்கு உவமைகளைப் பயன்படுத்தியதில் வல்லவராக இருந்துள்ளார். தமிழின் ஒலி கேட்கச் சபை நிறைந்திருந்த பெரியோரைப் பற்றி, ஒரு பாடலில் கூற வருகிறார் கவிஞர்,

***“ஆயன் குழலுக்கு அடங்கும்***
***பசுக்களைப் போலவும்,***
***மாயன் முகத்துக்கு மயங்கும்***
***மகளிரைப் போலவும்,***
***தாயின் குரலுக்குத் தாவி வரும்***
***மக்களைப் போலவும்***

பெரியோர் நிறைந்திருந்தனர் என்று பாடினார்.

இந்தக் கவிஞர்களைப் போல், கவிஞரேறு வாணிதாசனும் ஒரு பொருளுக்குப் பல உவமைகளை அடுக்கிப் பாடிய தன்மையைக் ‘குழந்தை இலக்கியம்’ என்ற அவரது நூலில் காண்கிறோம்.

கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வந்த கவிஞர் கூறுகிறார்:

பொட்டல் வெளிக்குநிழல், பூத்த மலர்க்கு மணம், நட்ட நிலத்துக்கு வரவு, கட்டிய வீட்டுக்குக் கதவு, கை விளக்குக்கு நெய், பெட்டி பேழைக்குச் சாவி, வெள்ள ஆற்றுக்குக் கரை, வளர்ந்த கொடிக்குக் கொம்பு, பண்ணுக்கு இயைந்த பாடல்... எனப் பல்வேறு உவமைகளைக் கூறித் தாம் கூற வந்த கருத்தை அழகுபடுத்திப் பார்க்கின்றார். அணி நயம் சேர்த்து மகிழ்கின்றார்.

---

**தான்பெறும் ஊதியத்தின் மதிப்பைவிடத் தனது உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் முன்னேற முடியும்**

**- ஆபிரகாம் லிங்கன்**

**பசி—உழைப்பு—வியர்வை இவையே மிகச்சிறந்த மருந்துகள்**

**- பெர்னாட் ஷா**



# ஒன்றுபட்டு நாட்டின் எல்லையை உறுதியுடன் காத்திடுவோம்





அன்னியர் எவர்புகினும் அடிகொடுத்து விரட்டிடுவோம்
அண்டை நாட்டு உறவுதன்னை அன்புடன் காத்திடுவோம்
தொன்றுதொட்ட சரித்திரத்தின் தொடர்புகழ் மீட்டிடுவோம்
தொல்லைதரும் எதிரிகளை துணிவுடன் எதிர்த்திடுவோம்!

ஒன்றுபட்டு நாட்டின் எல்லை உறுதியுடன் காத்திடுவோம்
வேற்றுமை மறந்திடுவோம் வீறுகொண்டு எழுந்திடுவோம்
நன்றுசெய்து பாரதத்தின் நற்புகழ் சேர்த்திடுவோம்
நாட்டுநலன் உயிராய்க் கொண்டு நாளெல்லாம்
உழைத்திடுவோம்!


சோதனைகள் எத்தனைதான் சூழ்ந்திருந்த போதினுமே
சாதனையால் உலகுபுகழ் சரித்திரங்கள் படைத்திடுவோம்
வேதனைகள் போக்குதற்கும் வாட்டங்கள் நீக்குதற்கும்
உதவிக்கரம் நீட்டிடுவோம் வாரிவாரி வழங்கிடுவோம்!

மக்களாட்சிப் பண்பாட்டின் மாண்புகாத்து பாரதத்தின்
தக்கதான பெருமையினை தரணியில் நாட்டிடவே
மிக்கதான நற்பணிகள் மேன்மையுடன் ஆற்றிடுவோம்
சிக்கல் யாவும் நீங்கி உயர் சாதனைகள் படைத்திடுவோம்!

குன்றெனத் தலைநிமிர்ந்து குவலயத்தெங்கும் ஓங்க
கண்ணாகும் இறையாண்மை கருத்தாகப் பேணிடுவோம்
என்றும் வாழும் அறநெறிகள் இகமெங்கும் பரப்பிடுவோம்
எந்த நாளும் ஒப்பந்தங்கள் உறுதியுடன் மதித்திடுவோம்!

இன்னுயிரின் இனியதாம் ஏற்றமிகு தாயகத்தின்
எழுச்சிமிகு சுதந்திரத்தில் இலங்குகின்ற தியாகம் யாவும்
உன்னதமாம் கடமை, உரிமை உணர்த்திடுவோம்
மக்களுக்கு
எண்ணத்தால் செயலினால் எந்நாளும் போற்றிடுவோம்!

– கவிஞர் கி.மு. முஹம்மது புகாரி




"வாழ்க்கையில் மனிதர்களின் தொடர்பு கசக்கும் நாள் வரும். ஆனால் உயர்ந்த புத்தகங்களின் கருத்துக்கள் என்றுமே கசப்பதில்லை" என்பார் டாக்டர் மு. வரதராசனார்.

புத்தகங்கள் காலமென்னும் கடலில் காட்சியளிக்கிற கலங்கரைத் தீபங்கள். புத்தகங்கள் கையில் பிரம்பு இல்லாமல் பேசும் ஆசிரியர்கள் சிலரை மகான்களாகவும், மகாத்மாக்களாகவும் மாற்றியிருப்பது புத்தகங்கள் என்றால் வியப்பாக இருக்கலாம். உண்மை அதுதான்.

ஒரு நாள் பொழுது போக வேண்டுமே என்பதற்காகப் பயன்படுத்தப்படாமல் மூலையில் கிடந்த அந்தப்புத்தகத்தை 'வெங்கட்ராமன்' என்ற அந்தச் சிறுவன் படிக்கத் தொடங்கினான். ஒவ்வொரு பக்கமாகப் படிக்கப் படிக்க ஏதோ ஒரு புதிய உலகத்தில் பயணப் படுவதைப் போலத் தோன்றியது அவனுக்கு.

படித்து முடித்து விட்டு ஒரு சின்னக் காகிதத்தை எடுத்தான். 'என்னுடைய தந்தையைத் தேடிப் புறப்பட்டு விட்டேன்' என்று எழுதி வைத்து விட்டு யாரிடத்திலும் சொல்லாமல் ஓடிப்போன அவனைத் தான் நாடே தேடி ஓடி வந்தது.

சாதாரண வெங்கட்ராமனாக இருந்த அவன் தான் ரமணமகரிஷியாக மாறினான். மாற்றிய அந்நூல் சேக்கிழார் எழுதிய பெரியபுராணம்.

சாதாரண மோகன்தாஸாக இருந்தவரை மகாத்மாவாக மாற்றியதும் புத்தகம்தான். தென்னாப்பிரிக்காவில் இரவில் இரயிலில் பயணம் செய்த போது அந்தப்புத்தகம் அவருக்குக் கிடைத்தது.

பொதுவாக சிலபேர் தூக்கம் வருவதற்காகப் புத்தகத்தைப் புரட்டுவார்கள். தூங்கச் செய்வது நல்ல புத்தகம் ஆகாது. தூங்க விடாமல் புரட்டுவதுதான் நல்ல புத்தகம். அத்தகைய புத்தகம்தான் அன்று அவர் கையில் கிடைத்தது.

சத்தியத்தையும், அகிம்சையையும் அதில் படித்தார். சர்வோதய சிந்தனைகள், சமுதாயப் பணிக்கான கதவுகளைத் திறந்து விட்டன. படித்ததைக் கடைப்பிடிப்பது என்று தீர்மானித்தார். அப்படி அவரை மாற்றியது ஜான்ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' (அன்டுதிலாஸ்ட்) என்கிற நூல்.

மராட்டிய சிவாஜி, மொகலாய சாம்ராஜ்யத்தையே எதிர்த்து வீரசிவாஜியாக மாற்றியது நம்முடைய இதிகாசக் கதைகள் தான்.

நெப்போலியன் போருக்குப் புறப்படும் போதெல்லாம் கூடவே நல்ல புத்தகங்களையும் எடுத்துச் செல்வானாம். கிடைக்கிற கொஞ்ச நேரத்தையும் வீணாக்காமல் படிப்பானாம். போரில் வெற்றியின் சிகரத்தைத் தொட்டு மாவீரனாகத் திகழ்ந்தான்.

'பூமியில் வாழ்வதற்கு நாம் தருகிற வாடகை தான் நமது சேவை' என்கிற வரிகளை படித்த பிறகு தான் சேவை செய்கிற எண்ணம் வந்ததாம் தெரசாவிற்கு. அதன் பிறகு தான் அகிலம் போற்றும் 'அன்னை தெரசாவாக' மாறினார்.

கன்னிமாரா நூலகத்தின் ஒவ்வொரு நூலையும் படித்த பிறகு தான் அண்ணா 'அறிஞர் அண்ணாவாக' உயர முடிந்தது.

இப்படி சாதாரண மனிதர்களையெல்லாம் சாதனை மிக்கவர்களாக மாற்றியது புத்தகங்கள்தான். அதனால் தான் புத்தகங்களை 'காலத்தின் விதை நெல்' என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஏப்ரல் 23 உலகப் புத்தக நாள். 1995ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் பொதுக்குழு கூட்டம் நடைப்பெற்றது. அப்பொழுது புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஏப்ரல் 23ஆம் நாளை உலகப் புத்தக நாளாகக் கொண்டாட தீர்மானித்தது. காரணம் அந்த நாளில் தான் புகழ் பெற்ற நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியரின் பிறந்த, இறந்த நாளாகும். அதன்படி 1996ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் இந்த நாளை உலகப் புத்தக நாளாகக் கொண்டாடப்படுகிறது.

புத்தகத்திற்கு நூல் என்ற ஒரு சொல்லும் உண்டு. நூல் ஆடையாகி மானத்தை காக்கிறது. நூல் கோணலைச் சரி செய்து சீர்படுத்துகிறது. அதுபோல் புத்தகங்களாகிய நூல்களும் அறிவைத் தருகின்றன. அந்த அறிவு வாழ்க்கையை

நெறிப்படுத்துகிறது. அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை 'அறிவு அற்றங்காக்கும் கருவி' என்றார்.

நாம் கற்கின்ற நூல்களின் அளவுக்குதான் நம்மிடம் நுட்பமான அறிவு பொருந்தியிருக்கும். அதுவே பிறருக்கும் வெளிப்படும். புதிய நூல்களைப் படிக்கும் ஆர்வம் புதிய புதிய சிந்தனைகளை உருவாக்கும். அதனால் எப்போதும் நாம் கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும்.

"படித்துத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதை விட ஒருவன் பிறக்காமல் இருப்பதே மேல். ஏனென்றால் ஒருவனிடம் இருக்கும் அறியாமை தான். அவன் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றது என்பார் பிளாட்டோ.


புத்தகங்கள் அறிவின் குவியல்கள். இது எல்லாப் புத்தகங்களுக்கும் பொருந்தாது. இன்று நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்வதற்காகப் பல மணி நேரங்கள் தேவைப்படுகின்றன. காரணம் மனசைக் குப்பையாக்குகிற குப்பையான பல புத்தகங்கள் குவிந்து கிடைக்கின்றன. அப்படியானால் எப்படித் தேர்ந்தெடுப்பது?

"மண்ணும், சர்க்கரையும் ஒன்றாகக் கலந்து விட்ட போதிலும் எறும்புகள் மண்ணை நிராகரித்து விட்டு சர்க்கரையை மட்டும் எடுத்துச் செல்கின்றன. இந்த உலகத்தில் நல்லவைகளும் கெட்டவைகளும் கலந்திருக்கின்றன. சர்க்கரையை மட்டும் எடுத்துச் செல்லும் எறும்புகள் போன்ற புத்திசாலி மனிதர்கள் கெட்டவைகளைத் தவிர்த்து நல்லவைகள் மட்டும் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பார் "ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்".

உடல் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் தேவையான உணவைத் தேடித் தேடி உண்கிறோம். அதுபோல் மனநலத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் உணவாக இருக்கும் நல்ல புத்தகங்களைத் தேடிப்படிக்க வேண்டும். தொலைக் காட்சிகளிலேயே மூழ்கியிருக்கும் குழந்தைகளை மீட்டி புத்தகக் கடலில் நல்ல முத்துக்களை எடுத்து செய்ய வேண்டும்.

அக்கறை உள்ள பெற்றோரும் அலமாரி நிறையப் புத்தகங்களும் வாய்க்கப் பெறும் குழந்தையே அதிர்ஷ்டசாலிக் குழந்தை என்பார்கள். பெற்றோர்கள் படிக்கும் பழக்கத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும். அதுவே அவர்களின் வாழ்வின் வெற்றிப் படிகளாகும்.

வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவரும் புத்தகங்களைப் படிப்பதை அன்றாடக் கடமையாகக் கொள்ள வேண்டும். புத்தகங்களே வாழ்க்கையின் திறவு கோல்கள் — வெற்றியின் திறவுகோல்கள்.




# தமிழே ஆளும் வழிகண்டார்!

- தாழை ந. இளவழகன்

தமிழுக் கென்று தனித்துறையைத்
தரணி போற்றத் தந்திட்டார்
அமிழ்தாம் அன்னைத் தமிழாலே
அரசு ஆணை செயலாச்சு
தமிழே எதிலும் முதன்மைபெற
தமிழக வணிக நிலையமெலாம்
தமிழால் பெயரைச் சூட்டவைத்தார்
தமிழே ஆளும் வழிகண்டார்!

எல்லா மக்களும் பயனெய்த
இனிய சாலை மின்விளக்கும்
எல்லா ஊருக்கும் பேருந்து
ஏற்பாய்க் குடிநீர் வசதிகளும்
எல்லா ஊரிலும் அங்காடி
எளிதில் பொருள்கள்
பெற்றிடலாம்
எல்லா ஊரிலும் பள்ளிகளாம்
என்றே பற்பல திட்டங்களாம்!
ஐந்தமிழ் அறிஞர் நம்முதல்வர்
அழகாய்க் கண்ட சமத்துவபுரம்
பைந்தமிழ் மக்கள் வெறுப்பின்றி
பாங்காய் வாழ வழியாச்சு
எங்கே சாதி! இல்லையென
யாவரும் ஒன்றாய் வாழ்ந்திடவே

தங்கத் திட்டம் பலகண்ட
தமிழக முதல்வர் வாழியவே!
அகவை எழுபத் தாறினிலும்
அன்பும் கருணை மிகக்கொண்டு
தகவாய்ச் செய்யும் செயலெல்லாம்
தமிழக மக்கள் பயன்கருதி
மிகமிகச் சிறப்பாய் பலதிட்டம்
மகிழ்வாய்த் தந்தார் நம்முதல்வர்
சுகமாய் மேலும் பல்லாண்டு
சிறப்பாய் முதல்வர் வாழியவே!



# மகளிருக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

இந்தியாவிலேயே முதல் முதலாக மகளிருக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று சென்னைக்கு அருகே உருவாக்கப்பட்டு வருகிறது. சென்னைக்குத் தெற்கே 41 கிலோமீட்டர் தூரத்தில் மாமல்லபுரம் செல்லும் வழியில் கேளம்பாக்கம் என்ற இடத்தில் இது அமைக்கப்படுகிறது. மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை இந்தத் திட்டத்தை எம்.எஸ். சுவாமி நாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்திய சுதந்திரப் பொன்விழா நினைவுத் திட்டமாகத் தொடங்கியுள்ளது. எட்டு எக்டேர் நிலப்பரப்பில் ரூ.8.5 கோடி செலவில் இது உருவாக்கப்படுகிறது. தகுந்த தொழில்நுட்பங்களைக் கண்டறிதல், நுண்ணுயிர் வளர்ப்பு வழங்கல், பயிற்சி, மறுபயிற்சி, தொழில்நுட்ப அடிக்கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிய பல்வேறு அம்சங்களையும் கொண்ட ஒருங்கிணைந்த அணுகு முறையை உருவாக்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை உருவாக்கும் திட்டத்தில் உறுப்பினர்களாகவும், உற்பத்தியாளர்களாகவும் இணைவதற்கு 65 மகளிர் தொழில் முனைவர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்தத் திட்டம் தொழில்முறை வல்லுநர்களால் மேலாண்மை செய்யப்படும்; பங்குதாரர்களும் மேலாண்மையில் ஊக்கத்துடன் ஈடுபட்டுச் செயல்படுவார்கள். சுற்றுச் சூழல் மேலாண்மையில் மிக உயர்ந்த தரங்கள் கடைபிடிக்கப் படும். சுற்றுச் சூழல் நலனுக்கு உகந்த உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய ஐ.நா. சுற்றுச் சூழல் மற்றும் மேம்பாடு மாநாடு நிர்ணயித்துள்ள தரங்கள் பின்பற்றப்படும்.

இந்தத் திட்டத்திற்கான அடிக்கல்லை குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் 1998 ஜூலை 29ஆம் தேதி நாட்டிவைத்தார். இந்தத் திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அமைக்கும், பிரபல விவசாய விஞ்ஞானியும், இந்தியாவின் பசுமைப் புரட்சியை உருவாக்கியவருமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான குழு ஒன்று இதன் மேலாண்மையை செய்யும்.

இந்தப் பூங்கா மையப்படுத்தப்பட்ட சேவைகளின் ஆதரவைக் கொண்டு பரவலாக்கப்பட்ட முறையில் உற்பத்தி நடத்தும் உத்தியை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படும். உயிரியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பல நவீன தொழில் பிரிவுகள் இங்கு அமைக்கப்படும். விவசாய - உயிரியல் தொழில்நுட்பம், உணவு உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவ உயிரியல் தொழில் நுட்பம் போன்ற பல பிரிவுகளும் தங்களுக்கென ஒரு சந்தையைப் பிடிப்பதை நோக்கமாகக் கொண்டு இங்கு அமையும். இந்தப் பூங்கா முழுமைபெற்று அமையும்போது இதில் தொழில்களுக்கான நுண்ணுயிர் வளர்ப்பு மையங்கள் மிக நவீனமான மல்ட்டிமீடியா தகவல் அமைப்பு, தரப் பரிசோதன்ன ஆய்வகங்கள் முதலான பல வசதிகளும் இருக்கும். ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்கள், தனியார் கம்பெனிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவை இந்தப் பூங்காவின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் மகளிர் தொழில்முனைவோருக்கு உதவி புரியும். தொழில் நுட்பத்திலும் பொருளாதாரத்திலும் பெண்கள் அதிகாரம் பெறச் செய்ய உதவுகின்ற முன்மாதிரியான அமைப்பாக இந்தப் பூங்கா விளங்கும்.

இந்தப் பூங்காவின் முக்கிய நோக்கம் மகளிர் தொழில் முனைவர்கள், விஞ்ஞானிகள், நிதி நிறுவனங்கள் தொழில் துறையினர் ஆகியோரை ஒரே இடத்தில் சேர்க்கின்ற மேடையாகப் பயன்படுவதாகும். திறன் தேர்ச்சி தேவைப்படும் தொழில்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை இது உருவாக்கும். நிரூபிக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பங்களை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்தப் பூங்கா ஒரு பயிற்சி மையமாகவும் பயன்பட்டு, பிராந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். மகளிர் தொழில் முனைவர்களும், தனியார் கம்பெனிகளும் உற்பத்திப் பொருள்களைக் கூட்டாகச் சந்தைப்படுத்துவதில் ஒத்துழைப்பதற்கும் இந்தப் பூங்கா வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவில் 8 தொழில் முனைவர்கள் பல்வேறு தொழில்களை அமைக்கவிருக் கிறார்கள். உணவு உயிரியல் தொழில்நுட்பம், மலர் சாகுபடி, நோய் நிர்ணய மருத்துவப் பரிசோதனை வசதிகள், அலங்கார மீன் வளர்ப்பு, மூலிகைப் பொருள்கள் தயாரிப்பு, சத்து கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிப்பு, ஸ்பிருலினா நுண்பாசி உற்பத்தி, இயற்கை கலப்பு உரங்கள் தயாரிப்பு போன்ற பல்வேறு வகையான தொழில்களை இவர்கள் அமைப்பார்கள். தொழில் முனைவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் தேவைப்படும்போது தொடங்கப்படும். இதற்கு வேண்டிய தொழில்நுட்ப உதவிகளை எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை வழங்கும். ஸ்பிக் அறிவியல் அறக்கட்டளையும் பிற ஆராய்ச்சி நிறுவனங்களும்கூட விஞ்ஞான தொழில்நுட்ப உதவிகளை அளிக்கும். இந்த ஆண்டு இறுதிக்குள் குறைந்தது 4-6 தொழிற்கூடங்கள் நிறைவு பெற்று இந்தப் பூங்கா முழுமையாகச் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகளில் கிடைத்துள்ள புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி புதிய பொருள்களையும், செயல்முறைகளையும், தொழில் நுட்பங்களையும் உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புது வகையான நோய்த் தடுப்பு மருந்துகள், எய்ட்ஸ், காசநோய், மஞ்சள் காமாலை முதலான உயிர்க்கொல்லி நோய்களைக் கண்டறியும் சோதனைச் சாதனங்கள் போன்ற பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்வது பற்றி தொழில் துறையினருடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. மைக்காரைரஸஸ் உரங்கள் உள்ளிட்ட புதிய உயிரியல் உரங்களையும் உயிரியல் பூச்சி மருந்துகளையும் பெருமளவில் உற்பத்தி செய்வதற்குத் தொழில் துறையினர் முன்வந்துள்ளனர். நுண் முறை உயிரினப் பெருக்கப் பூங்காக்கள் மூலம் திசு வளர்ப்புத் தொழில் வர்த்தக ரீதியாக நடைபெறத் தொடங்கியுள்ளது. உயிரியல் தொழில்நுட்பத்தின் பல்வேறு அம்சங்களிலும் மனிதவள மேம்பாடு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. தொழில் தொடங்குதல், காப்புரிமை (பேடண்ட்) பெறுதல், உயிரியல் பாதுகாப்பு போன்ற பல்வேறு அம்சங்களிலும் ஒவ்வொர் ஆண்டும் 300-500 விஞ்ஞானிகள் பயிற்சி பெறுகிறார்கள். உயிரியல் தகவல் தொழில்நுட்பத்தில் விவசாயிகள்கூடப் பயன்படுத்தக்கூடிய மென்பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. பல்வகை உயிரின வளத்தைப் பாதுகாத்தல், பல்வேறு உயிரினங்களின் உயிரணு அமைப்புகள் ஆகியவை பற்றிய தகவல்களும் கணிப்பொறிகளில் தொகுத்துவைக்கப்பட்டுள்ளன. உயிரியல் தொழில்நுட்பத்தில் நம் நாட்டில் உருவாக்கப் பட்டுள்ள அறிவுத் திறனும், அடிக்கட்டமைப்பு வசதிகளும், 21ஆம் நூற்றாண்டில் உயிரியல் அடிப்படையிலான தொழில்கள் விரைவாக வளர்ச்சி பெறுவதற்குச் சிறப்பான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன.



இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் இன்னும் ஓராண்டில் தொடங்கும். மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறை உருவாக்கிய தொழில்நுட்பங்கள் மகளிர் தொழில் முனைவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். இந்தத் தொழில்நுட்பங்களை மகளிர் தொழில்முனைவர்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்காக ஒரு பணியரங்கும் கண்காட்சியும் விரைவில் நடத்தப்படும்.

இந்தப் பூங்காவில் 20 தொழிற்கூடப் பிரிவுகளும் 45 தொழில் மனை பிரிவுகளும் இருக்கும். தொழிற்கூடப் பிரிவுகள் ஒவ்வொன்றும் 100 சதுரமீட்டர் பணி முடிந்த கூடப் பரப்பும் 300 சதுரமீட்டர் திறந்த நிலமும் கொண்டதாக இருக்கும். தொழில்மனைப் பிரிவுகள் ஒவ்வொன்றும் 1000 சதுரமீட்டர் பரப்புக் கொண்டதாக இருக்கும். இந்தத் தொழிற்கூடப் பிரிவுகள், மனைப் பிரிவுகள் அனைத்தும் குத்தகைக்குக் கொடுக்கப்படும். குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள், இண்டர்நெட், இ-மெயில் போன்ற பொது வசதிகள் மிதமான கட்டணங்களில் அளிக்கப்படும். இந்த உயிரியல் தொழில் நுட்பப் பூங்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வெளிச் சந்தையில் கிடைக்கும் பொருள்களைவிட தரத்தில் உயர்ந்தவை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இங்கு உற்பத்தி செய்யப்படும். பொருள் களுக்குப் பொதுவான ஒரு பிராண்ட் பெயரை உருவாக்க முயற்சி செய்யப்படுவதாக டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் கூறுகிறார்.

*– பத்திரிகை தகவல் நிலையம்*

# சாதி விலங்குடைக்க வேண்டும்!



சாதி யென்னுந் தீயி லின்று
வேகு தம்மா உயிர்கள் - சாதிச்
சங்கம் வைத்துப் பங்கந் தேடிச்
சாகும் மனிதப் பயிர்கள்!

ஆதி மனிதர் சாதி யின்றி
ஆனந்த மாயிருந்தார் - வெறும்
ஆர்ப்ப ரிப்பும் ஏது மின்றிப்
பூமிக் கழகு சேர்த்தார்!

நாதி யற்ற மனித ருக்குச்
சாதி மதங்க ளெதற்கு? - இந்த
நாட்டி லெங்கும் சமத்து வபுரந்
தோன்ற வேண்டு மிதற்கு!

பாதி வழியில் வந்த சாதி
விலங்கு டைக்க வேண்டும் - இங்கு
பார்க்கும் மனிதர் தம்முள் பேத
விலங்கை யடக்க வேண்டும்.

கவிஞர் 'இளவல்' அரிகரன்



# நாகை மாவட்டத்தில் தூர்வாரும் பணிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி தமிழகம் முழுவதும் ஆறு, வாய்க்கால் போன்ற நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு பாசன வசதிக்கு உகந்ததாக மாற்றி வருவது தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல் என்பது அனைவரும் அறிந்த பேருண்மையாகும்.

இந்த தூர்வாரும் பணி, வெள்ளச்சேதம் மற்றும் புயல்சேதம் அதிகமாக ஏற்படக்கூடிய நாகை மாவட்டத்தில் செயல்படுத்தி வருவது குறித்தும், நாகை விவசாயிகளின் மனப்போக்கு குறித்தும் நேரில் காண பத்திரிகையாளர்கள் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

பத்திரிகையாளர்கள், அரசு அலுவலர்கள், விவசாயப் பிரதிநிதிகள் கொண்ட பயணக்குழு மாவட்ட ஆட்சியர் திரு. சிவிதாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களின் அறிவுரையின்படி 1.6.99 மற்றும் 3.6.99 ஆகிய நாட்களில் காவிரி வடிநிலக்கோட்டம் மற்றும் வெண்ணார் வடிநிலக்கோட்டம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டது. பொது மக்களிடமும் பணி குறித்து கருத்து கேட்கப்பட்டது. இதில் பெரும்பாலானவர்களின் கருத்து ஒத்திருப்பதால் சிலருடைய கருத்துக்கள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளது. செய்தியாளர்களை உடன் வைத்து நாகை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பேட்டியை தொடங்குகிறார்.

(முதல் நாள் பத்திரிகையாளர்கள் சென்ற இடம் மயிலாடுதுறை கோட்டத்திலுள்ள சோழம்பேட்டை பகுதியிலுள்ள பழங்காவேரி ஆறு) தூர்வாரும் பணியை பார்வையிடவும், கருத்துக்களை கேட்கவும் பத்திரிகையாளர்கள் நாகையிலிருந்து வந்துள்ளோம் என அறிமுகப்படுத்திக் கொண்டு பேட்டியை தொடர்கிறோம்.

***குஞ்சிதபாதம் (மேலத்தெரு, சோழம்பேட்டை) :*** எனக்கு தெரிஞ்சி 45 வருஷமா இதுல தூர் வாரலிங்க. இந்த ஆறு 25 மைலுக்கு மேல பாஞ்சி 55 எக்டேருக்கு பாசன வசதி தருதுங்க. இது எங்களுக்கு நல்லவிதமாக பயன்படுமுங்க.

***தம்புசாமிமல்லிகா அம்மாள் :*** அளவு அளந்து தூர் எடுக்கறதால இதுவரை தனியார் ஆக்ரமித்த இடம் அரசாங்கத்தோட என தெரிஞ்சது. இனிமே கிராம மக்கள் ஆக்ரமிப்பு இல்லா பாத்துடுவோம்.

***பி.எஸ். மணி (மூவலூர் தெற்குத்தெரு) :*** ஆலமரம் தென்பகுதியில் வளைவு நேரா நிமிர்த்தினால் சுடுகாட்டுக்கு அருகில் தண்ணி குத்தாது.

***கிருஷ்ணமூர்த்தி (அந்தமானில் பணிபுரிந்து சொந்த ஊரில் இங்கு வசிப்பவர்) :*** இந்த பகுதி தூர்வாரும் பணியில்



ஆக்ரமித்த 1 ஏக்கர். 200 தென்னைமரம் அடிபட்டு போச்சு. அமைச்சர்கிட்ட மனுகொடுத்து மூணுவருசமா காத்திருந்தோம். அமைச்சர் ஆர்டர்போட்டு ஆக்ரமிப்பை எடுத்ததோட எதிர்காலத்தில் பாசனம் நல்லா செய்ய வழிபண்ணிருக்காங்க.

***சி. புண்ணியம், பெரிய விவசாயி** (மேலத்தெரு, மூவலூர்) :* என்னோட தென்னைமரங்கள் அகற்றப் பட்டுள்ளன இருந்தாலும் பாசனத்துக்கு வசதி வந்ததால மகிழ்ச்சிதானங்க.

(அடுத்து சென்று பார்வையிட்ட இடம் பாண்டூர் வாய்க்கால்)

***ராமமூர்த்தி மற்றும் குளத்தூர் வைத்தியநாதன் :*** ராமசந்திரன் வாய்க்காலில் இடிந்துள்ள மதகை கட்டி தூர்வாரனும். வாய்க்கா குறுகிவிட்டது. தற்போது 200 மீட்டராவது வெட்டனும். மீதிய வரும் ஆண்டிலாவது பணி எடுத்துக்கொள்ளனும்.

***இடம் - கதிராமங்கலம் காவேரி :*** ரூ.14.95 இலட்சம் மதிப்பிலான 6.8 கி.மீ. பணியில் 2 கி.மீ. முழுதும் முடிந்துவிட்டது. மேலும் பணி தொடர்கிறது. 32,986 ஏக்கர் பாசன பரப்புகொண்ட இந்த பகுதியில் காவேரி ஆறு வடக்கே திரும்புவது சிறப்பம்சமாகும். வடக்கே திரும்பும் வேறு ஒரு இடம் பூம்புகார். இரு இடங்களில் மட்டுமே காவேரி வடக்காக திரும்புவதாக தெரிகிறது. குத்தாலம், ராஜகோபாலபுரம், திருவலங்காடு கிராமங்கள் இதனால் பாசனம் பெறும். 12.6.99-க்குள் பணி முடித்து விடுவதாக ஒப்பந்தக்காரர் சார்பில் உறுதியளிக்கப்பட்டது.

***இடம் : மஞ்சவாய்க்கால், விரசோழம் :*** நச்சினார் குடி, கோமல், மங்கநல்லூர் ஆகிய கிராமங்கள் பயன்பெறும் விதத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பில் 21 மீட்டர் அகலத்திற்கு 16.280 கி.மீ. தூரத்திற்கு தூர் எடுத்து ஆறு அகலப்படுத்தும் பணி பார்வையிடப்பட்டது.

***அந்தோணியம்மாள் (விவசாய கூலி) :*** எனக்கு கருத்தறிஞ்சி தூர் எடுக்கறது இப்பத்தான் பார்க்கிறேன். ஆக்ரமிப்பும் அகற்றி இருக்காங்க. அந்த மவராசா (கலைஞர்) நல்லா இருக்கணும்.

***கலியமூர்த்தி, (ஓய்வு பெற்ற ஆசிரியர்) :*** நண்டலாறு - பூருட்டி அருகே பாதி வெட்டி அருகே பாதி வெட்டியிருக்காங்க. பணி நடந்து வரதை நேரில் பார்க்கிறோம்.

***பக்கிரிசாமி (சாத்தனூர்) :*** நான் பிறந்ததிலிருந்து இந்த ஆத்துல தூர் எடுக்கறத இப்பதான் பாக்றேன். ஆக்ரமிப்பும் அகற்றி இருக்காங்க. சர்வே பண்யிருக்காங்க. நல்லவிதமா இந்த பணி நடக்குதுங்க.

***இடம் : கோமல் வாய்க்கால் :*** 2,180 ஏக்கர் ஆயகட்டு கொண்ட இந்த வாய்க்கால் வெட்ட நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக பொதுப் பணித்துறையினர் தெரிவித்தனர்.

***இடம் : நண்டலாறு (கோமல் - கிழக்கு) :*** கோவிந்த காலகம், கந்தமங்கலம், தத்தங்குடி, கழனிவாசல் வாய்க்கால் ஆகிய பணிகள் பார்வையிடப்பட்டன. கந்தமங்கலம் பகுதியில் ரெகுலேட்டர் கீழ்புறத்தில் மிகப்பெரிய அளவிலான மரங்கள் ஆற்றிலிருந்து அகற்றப்படவில்லை. பலமரங்கள் வெட்டப்பட்டு ஆற்றிலேயே கிடப்பதால் நீர் வரத்து பாதிக்கப்பட்டு, கரைசேதம் அடைய வாய்ப்புள்ளது. மாவட்ட ஆட்சியரிடத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு, வெட்டப்பட்ட மரங்கள் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***இடம் : சேத்தூர் வாய்க்கால், சீர்காழி :*** தலைஞாயிறு, சேத்தூர், கொண்டத்தூர் கிராமங்கள் பயன்பெறும் ரூ.12.35 இலட்சம் மதிப்பில் 35.5 கி.மீ. நீளத்திற்கு செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டோம்.

மயிலாடுதுறை டைவர்சன்சேத்தூர் வாய்க்கல் 10.45 கி.மீ. பணியில் 5 கி.மீ. பணி முடிந்துவிட்டது.

பழவார் மூன்றாம் சரகம் 9.68 கி.மீ. வரை நெய்வேலி காட்டாமணக்கு மற்றும் மலர்திட்டு அகற்றி தூர்வாருவதற்கு ரூ.38,92,500 மதிப்பில் இருமாத தவணையில் பணி நடைபெற்று வருகிறது.

*பாலாகுடி சம்பந்தமூர்த்தி, பிள்ளையார் கோயில்தெரு :* இதுவரை எந்த அரசும் செய்யாத மகத்தான பணி. இதனால் விவசாயிகளுக்கு நல்ல விடிவு ஏற்படும்.

காவிரி வடிநிலக்கோட்டம் (கிழக்கு) 47 பணிகளில் 44 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 590.52 கி.மீ. தூர்வார வேண்டியதில் 268.6 கி.மீ. முடிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பான ரூ.593.27 இலட்சத்தில் ரூ260.40 இலட்சம் மதிப்பிலான பணிகள் நல்ல முறையில் முடிக்கப் பட்டுள்ளன.

**- லோ. கிருஷ்ணமூர்த்தி**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம் மாவட்டம்.

★ ★ ★

# 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு கண்டுபிடிப்பு


**கு.தாமோதரன்,**
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

கரூர் மாவட்டம் குளித்தலை வட்டத்தில் உள்ள நங்கவரம் என்ற கிராமத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வணிகர் குழுவின் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் கன்னிமார் கோயில் அருகே சாலை ஓரத்தில் ஒரு மீட்டர் உயரமும், 40 செ.மீ . சதுரமும் உள்ள தூண் போன்ற கல்லில் ஒருபுறம் நான்கு கரங்களுடன் கூடிய துர்க்கையின் உருவமும் அதன் பின்புறம் திருமகளின் தொன்மையுருவான ஸ்ரீவஸ்தமும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருமகளின் இருபுறம் குத்துவிளக்குகளும் அதன் கீழே கல்வெட்டும் உள்ளது. கல்வெட்டுப் பகுதியிலேயே பண்டைய வணிகர் கல்வெட்டுகள் பெருமையாகக் குறிப்பிடும் ஒரு தண்டில் கோர்த்த இரு தொங்கல்களாகப் பசும்மையும் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. இக்கல்லின் ஒரு பக்கத்தில் சுருள்பட்டா, அரிவாள், சிற்றுளி ஆகிய படைகலன்களும் மறு பக்கத்தில் நீண்ட வாளும் கேடயமும் சிற்பங்களாக உள்ளன. 10ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் கிரந்தம் மற்றும் தமிழ் எழுத்தில் உள்ள கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

*"ஸ்வஸ்திஸ்ரீ பவத்ரோணச்மன்தோட்டம்*
*வளஞ்சியர் ஐஞ்னூற்றுவர்*
*பேர் அஞ்னூற்றுவன்*
*இவர்கள் மக்கள் வாள்க (ர) ளாரும்*
*பன்மையாரும் ரக்ஷை*

பவத்ரோணச்மன் என்பவன் வளஞ்சிய ஐந்நூற்றுவர் பொருட்டு ஒரு தோட்டம் அமைத்துள்ளான். அதன் பெயர் ஐந்நூற்றுவன் என்பதாகும். இதனை வாட்படையினரும், பன்மையாரும் காக்க வேண்டும் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும். கி.பி. 9ஆம் நூற்றாண்டு முதல் வளஞ்சியர்–ஐந்நூற்றுவர் என்ற பெயரில் வணிகர் குழுக்கள் சிறந்து விளங்கின. இவை காளி, துர்க்கை, அய்யப்பொழில் நங்கை போன்ற பெயர்களில் அமைந்த





கல்வெட்டுகளால் அறியக் கிடைத்துள்ளது.

பண்டைய வணிகர் குழுக்கள் தங்களது பாதுகாப்புக்காகப் பலவகைத் தனிப்படைகளை வைத்திருந்தனர். அவ்விதப் படைகளே இக்கல் வெட்டிலும் காட்டப் பட்டுள்ளன.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வணிகர் கல்வெட்டை மேல் நங்கவரத்தைச் சேர்ந்த திரு. இராமமூர்த்தி தந்த தகவலின் பேரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் திரு.கி.ஸ்ரீதரன், கரூர் காட்சியகம், காப்பாட்சியர் நாக.கணேசன், இளநிலை உதவியர், திரு.நடராசன் ஆகியோர் ஆய்வு செய்தும் படியெடுத்தும் துறைக்கு அளித்தனர். மேலும் சென்னையை அடுத்த பல்லாவரம் அருகே பொழிச்சலூரில் ஐநூற்றுவர் குளம் என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதிலும் குத்துவிளக்கும், கலப்பை, குறுவாள் மற்றும் உடுக்கை செம்பொற்பசும்பை (பணப்பை) ஆகியனவும் பொறிக்கப்பட்டுள்ளன.

தெய்வங்களை வழிபட்டன. தாங்கள் வணிகம் செய்த பகுதிகளில் தங்கள் குழுவின் பெயரால் பல தர்மங்களைச் செய்தனர். அவ்விதமே நங்கவரத்திலும் தோட்டம் அமைத்துள்ளனர். குளித்தலை அருகேயுள்ள லாலா பேட்டை பட்டவாய்த்தலை (பேட்டை வாய்த்தலை) ஆகியவை சோழர் மற்றும் விஜயநகரர் காலத்தில் பேட்டை என்ற பெயரில் வணிகத்தலமாக விளங்கியிருக்கின்றன. இவ்வூரில் மறவளீச்சுவரம், மாகாளிபிடாரியார் சாத்தனூர் நங்கை என்ற பழம் பெயர்களில் சிவன் மற்றும் காளி கோயில்கள் அமைந்திருந்தமை இவ்வூர்க்

பண்டை தமிழகத்தில் மணிக்கிராமம் நாநாதேசி, அய்யம்பொழில், சித்திரமேழிப் பெரியநாடு போன்ற பெயர்களில் பல்வேறு வணிகக் குழுக்கள் இருந்தன. இவை தென் மாநிலம் தக்காணம், இலங்கை மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வணிக நடவடிக்கைகள் மேற்கொண்டன. இவர்களுக்கென்று மூன்று கை மகாசேனை, எறிவீரர் என்ற பெயர்களில் பாதுகாப்புப் படைகளும் இருந்தன. இவ்வகை வணிகக் குழுக்களில் ஐநூற்றுவர் என்ற வணிகக் குழுவும் ஒன்றாகும். கரூர் மாவட்டம் நங்கவரம் பகுதியில் கண்டு அறியப்பட்ட கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். இப்பகுதிகளில் தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டு வரப்படுகிறது. ★

**இயங்கிக்கொண்டிருப்பதே படைப்புகளின் நியதி. முன்னேற்றம் காணவேண்டும் என்னும் துடிதுடிப்பும் அந்த இயக்க உணர்ச்சியினால் உண்டாவதுதான்.**

**– லாங்பெல்லோ**

மருத்துவம் :

# போலியோ நோயை ஒழிப்போம்

– டாக்டர் டி.ஆர்.அபிராமி

மக்கள் செல்வத்தை விட உயர்வான செல்வம் வேறு எதுவும் இல்லை என்கிறார், தெய்வப் புலவர் திருவள்ளுவர். ஆம் ! நிறைந்த பொன்னும் பொருளும் பெற்றுள்ள செல்வந்தர்களில் சிலர், பிள்ளைச் செல்வம் வாய்க்காமல் அடையும் மனத்துயர், மாற்ற அரிதாக இருப்பதை நாமும் பார்க்கிறோம்.

பிள்ளைகளைச் செல்வம் என்று குறிப்பிட்டதால், அதை ஏராளமாக பெற்றுவிட்டால், அதுவும் துன்பம்தான். நம்மில் பலரும் அதை உணராமல் இருப்பதாலேயே, ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்று அரசும் அறிவுறுத்தி வருகிறது.



பொருட் செல்வத்தைப் பாதுகாக்க எவ்வளவு பொறுப் புணர்ச்சியும், விழிப்புணர்ச்சியும் தேவையோ — குழந்தைச் செல்வத்தைப் பாதுகாக்கவும் அவ்வளவு பொறுப்புணர்வும் விழிப்புணர்வும் தேவை.

இதை வலியுறுத்தித்தான் தேசிய நோய்த் தடுப்பு இயக்கம், தீவிர போலியோ ஒழிப்புத்திட்டம் ஆகியவைகளை அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. மாநகராட்சி பெருந்துணை புரிகிறது.

போலியோ என்கிற இளம்பிள்ளை வாத நோயை அகற்றுவதில் ஏறத்தாழ மாபெரும் வெற்றி கிடைத்துவிட்டது என்றே சொல்லலாம். கடந்த மூன்றாண்டு காலமாக இந்த இயக்கம் பெரும் நகரங்களிலே மட்டுமல்லாமல், குக்கிராமங்கள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில், சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் தேதி இத்திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் சென்னை இராயப்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்ட அவ்விழாவில் — மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.தலித் எழில்மலை அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஊர்களிலும், மொத்தத்தில் 62 இலட்சம் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால், அதற்கும் மேலாக — மக்கள் விழிப்புணர்ச்சி காரணமாக 65.34 இலட்சம் குழந்தைகளுக்கு அப்போது இலவசமாகச் சொட்டு மருந்து தரப்பட்டது. இதன்மூலம் 106 சதவிகிதம் எய்தப்பட்டு, குறியீட்டை மிஞ்சி சாதனை படைக்கப்பட்டது.

இந்தியா முழுமையிலுமாக — மொத்தத்தில் அந்நாளில் 13 கோடி குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கப்பட்டது. நாடெங்கும் இப்பணியில் 25 இலட்சம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள்; தமிழகத்தில் மட்டும் அரசு அமைப்புடன் ரோட்டரி சங்கம் போன்ற தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சம் பேர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

முதல் கட்டப் பணியினைப் புதுடில்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் தொடக்கி வைத்தார். இரண்டாம் கட்டமாக இந்த ஆண்டு தொடக்கத்தில் — ஜனவரி 18ஆம் தேதியும், விடுப்பட்ட குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது.

தமிழகமெங்கும் இதற்காகச் சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், கல்விக்கூடங்கள் போன்ற இடங்களில் ஏறத்தாழ 40,000 இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. சென்னையில் மட்டும் 851 மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழக அரசு நிதியுதவியுடன் — மத்திய அரசும், யுனிசெ∴ப் நிறுவனமும் மட்டும் இதற்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

சென்னை மாநகராட்சி மட்டும், இரண்டாம் கட்ட முகாமில் 1,110 மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்கியது. மாநகராட்சி மூலம் ஆழ்வார்பேட்டையில் நடைபெற்ற இதற்கான முகாமில் வணக்கத்திற்குரிய

சென்னை மாநகர மேயர் திரு.மு.க. ஸ்டாலின், துணைமேயர் திருமதி. ஜெயச்சந்திர வதனா, மாநகராட்சி ஆணையர் திரு.கோலப்பன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அரசு மருத்துவமனைகளில் — குழந்தை பிறந்ததுமே இவ்வாறுசொட்டு மருந்து தரப்படுகிறது. பிறகு, ஒன்றரை மாதம் கழித்தும், இரண்டரை மாதம் கழித்தும், மூன்றரை மாதம் கழித்தும் சொட்டு மருந்து தரப்படுகிறது.

இவ்வாறு கருத்தோடு கண்காணிக்கப்பட்ட குழந்தைகள் இளம்பிள்ளை வாத நோய்க்கு ஆளாவதே இல்லை; உரிய கா்லத்தில் அப்படிப் போட மறந்துவிட்டால் கூட, அல்லது அலட்சியமாக இருந்துவிட்டால் கூட 5 வயது வரை இவ்வாறு சொட்டு மருந்தும் — டி.பி.டி. எனப்படும் 'கக்குவான், தொண்டை அடைப்பு, ஜன்னி' ஆகியவற்றுக்கான தடுப்பூசியும் போட்டுக் கொள்ளலாம்.



மலம் தண்ணீரில் கலப்பதாலேயே போலியோ கிருமிகள் பரவுகின்றன. தூய்மையற்ற நீரைப் பருகுவதனாலும் இது ஏற்படும். மழை — குளிர்காலமெல்லாம் முடிந்து ஆண்டு தொடக்கத்தில் — இதன் தாக்கம் அதிகமாக இருக்கும். இதனால்தான் முன்னெச்சரிக்கையாக டிசம்பர் — ஜனவரியிலேயே போலியோ சொட்டு மருந்து போடுகிறோம்.

மழைக்காலத்தில், வைரஸ் மூலம் பரவுகின்ற போலியோ நோயிலிருந்து, இவ்வாறு மருந்து கொடுப்பதன் மூலம் பச்சிளம் பாலகர்களின் எதிர்காலத்தை நாம் இன்ப மயமாக்க முடியும்.

இல்லாவிட்டால் — போலியோ நோய் காரணமாகக் குழந்தைக்குக் கை—கால் விளங்காமல் போய்விடக்கூடும். அப்படி ஆகிவிட்ட பிறகு, எப்பாடு பட்டாலும் அவர்களைக் குணப்படுத்தவே முடியாது. ஆரம்பத்திலேயே கண்டு பிடித்துவிட்டால் குணப்படுத்தி விடலாமா என்று சிலர் கேட்கலாம்; அதெல்லாம் கூட முடியவே முடியாது.

இந்த நோய் கடுமையாகிவிட்டால், இறப்பு வரைக்கும் கூடக் குழந்தையைக் கொண்டுபோய்விடும். இதையெல்லாம் உணர்ந்துதான் அரசே இந்தத் தீவிர போலியோ ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரமாகத் தமிழகமெங்கும் செயல்படுத்தி வருகிறது.

பெரும்பாலும் சொட்டு மருந்தை டாக்டர்களே போடுவார்கள் என்றாலும், ஒரு முகாமின் போது குறைந்தது ஐநூறு குழந்தைகளுக்காவது போடவேண்டிய நிலை வரும்போது அதற்குத் தக்கபடி டாக்டர்களை இதற்காக ஏற்பாடு செய்தால் மற்ற மருத்துவப் பணிகள் தடைப்படும். ஆகவே, பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்களையும் இதற்கான பணிக்கு அமர்த்துவது உண்டு.

சொட்டு மருந்து போடுவது பற்றி, மருத்துவத் துறையைச் சாராதவர்களுக்கும் பயிற்சிக் கொடுத்து அவர்களையும் இப்பணியில் ஈடுபடுத்துவது உண்டு. வாய்வழியே இரண்டு சொட்டுதான் மருந்து தரவேண்டும் என்றாலும், அதற்கும் பயிற்சி வேண்டுமல்லவா?

போலியோ சொட்டு மருந்தை எப்போதும் 8 டிகிரிக்குக் குறையாத சீதோஷ்ண நிலையில் வைத்திருக்க வேண்டும். இது அதிகம் போனாலோ, குறைந்தாலோ — அல்லது அதிக காலம் ஆகிவிட்ட மருந்து என்றாலோ அதனால் பக்கவிளைவு எதுவும் இல்லை, என்றாலும் — மருந்துக்கு உள்ள சக்தி போய்விடும்; பயனற்றதாகிவிடும்.

இப்போது அரசு மருத்துவமனைகளில் புதன்கிழமை தோறும் சொட்டு மருந்து தரப்பட்டுவருகிறது. மாநகராட்சி மருத்துவமனைகளும் இவ்விஷயத்தில் மிகவும் விழிப்போடு செயல்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு டிசம்பர் ஆறாம் தேதி முதல் கட்டமாகவும், 1999 ஜனவரி 17ஆம் தேதி இரண்டாம் கட்டமாகவும் நாடெங்கும் தீவிர போலியோ ஒழிப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

இம்முகாம் தொடங்குவதற்கு முன்பாக — அதுபற்றி வானொலியிலும், தொலைக்காட்சியிலும், தொலைபேசியிலும், செய்தித் தாள்களிலும் மட்டுமல்ல; நாம் வாங்கும் பால்பாக்கெட் உரை மீதும் கூட விளம்பரப்படுத்தப்பட்டது.

குழந்தைக்குக் கால் செயலிழந்து விட்டதா? இளம்பிள்ளை வாதமாக இருக்கலாம். சரியான தகவல் தருவோர்க்குச் சன்மானம் உண்டு; ரூ.500 இனாம் — என்றெல்லாம் கூட விளம்பரப்படுத்தப்பட்டது.

2000—த்திற்குள் போலியோ நோயை ஒழிக்க வேண்டும் என்பது — உலக சுகாதார நிறுவனத்தின் உன்னத நோக்கம் மட்டுமல்ல; தமிழக அரசின் நோக்கமும் ஆகும். அந்த நல்ல நோக்கம் நிறைவேற நாமும் நம் பங்கைச் சிறப்பாக ஆற்றலாமே! ★

# மனம் ஒரு குரங்கா!......

மனம் ஒரு குரங்கா!...
ஓ!...
மனிதனுக்குள் ஒரு விலங்கா!...

★ ஆறு அறிவினுள்
ஐந்தறிவா!...

★ குரங்கிலிருந்து
மனிதன் பிறந்தான்
என்கிறோம்!...
ஆனால்
அவனுள் குரங்கும்
இருக்கிறது என்கிறோம்!...

★ மனமென்ன
மனிதன்
குரங்கிலிருந்து
பிறந்ததினால்
குரங்கு தந்த பரிசா?!...
இல்லை
மனிதன்
திருப்பித் தராமலிருக்கின்ற
கடனா?!...

★ மனமென்னும்
குரங்கு ஆட்டுகின்ற
கிளைகளா
நம் உடல்கள்!...

★ எனக்கு
இதில் சம்மதமில்லை

★ மனிதன் தனக்குத் தானே
தன்னைச் செதுக்கிக் கொள்ள
இயற்கைத் தந்த
உளியல்லவா மனம்!...

★ மனிதனின் மனம்
குரங்கென்றால்!...
குரங்கின் மனமென்ன
மனிதனா!...

★ நிலவைத் தொட்டு வந்த
நீல் ஆம்ஸ்ட்ராங்கும்
இமயம் ஏறி
இறங்கிய மனிதனுக்கும்
குரங்கு மனமா
குருவாக யிருந்தது!...

★ அண்டம் விட்டு
அண்டம் தாவும் சக்தியை
யாரடா மதிப்பிட்டது
மரம் விட்டு
மரம் தாவும்
குரங் கென்று!...

★ மனிதனென்பவன்
கல்,
கல்லுக்குக்குள்
ஒளிந்து கிடக்கும்
சிற்பத்தைக் கண்டு பிடிக்கும்
சிற்பியல்லவா மனம்!...

★ மனிதனின்
வாழ்க்கைக் காகிதத்தில்
வாரி இறைத்திருக்கின்ற
வண்ணங்களை
வரிசைப்படுத்தி
அழகான ஓவியமாக வரையும்
ஓவியனல்லவா மனம்!...

★ என்னையே
நான் பிரசவிக்கக்
காரணமான
கர்ப்பப் பையல்லவா
இந்த மனம்!...

★ உலக உருண்டையின் மேல்
உலவவும்,
உருளுகின்ற உலகை
என்னுள்
ஒளித்து வைக்கவும்
ஊடகமான தல்லவா
மனம்.

– கவிச்சிற்பி

# வரலாற்று நோக்கில் கலிங்கராஜபுரம்

– டாக்டர் எஸ். பத்மநாபன்

கன்னியாகுமரி மாவட்டம் கலிங்கராஜபுரத்தில் அம்மாவட்டத்தின் முதலாவது சமத்துவ புரத்தை தமிழக முதலமைச்சர் கலைஞர் 27-6-99 அன்று காலையில் திறந்து வைத்தார். குழித்துறையிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது கலிங்கராஜபுரம். இந்நேரத்தில் கலிங்கராஜபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தலங்களின் வரலாற்றுப் பின்னணியைத் தெரிந்து கொள்வோம்.

தஞ்சைக்கும் குமரிக்கும் சங்க காலத்திலிருந்தே தொடர்பு இருந்து வந்துள்ளது என்பதை அகநானூற்றுப் பாடல் ஒன்றும், குமரி மாவட்டக் கல்வெட்டுக்களும் ஊர் பெயர்களும் எடுத்துரைக் கின்றன. இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் மூவரும் சேரநாட்டிலுள்ள காந்தளூர் சாலையைப் பலமுறை தாக்கி வெற்றி கொண்டதாக சோழர் வரலாறு கூறுகின்றது.


## குலோத்துங்க சோழன்

குலோத்துங்கசோழன் காந்தளூர் சாலையைப் பிடித்தடக்கி கொல்லத்தையும் அழித்து, "கொல்லம் அழிவுகண்டான்" என்ற பெயரைப் பெற்றான் என்பதை கேரள வரலாறு கூறுகின்றது. அக்காலத்தில் சேரநாடு செல்வதற்கு இச்சோழ மன்னர்கள் குமரிமண்ணைத் தாண்டியே சென்றிருக்க வேண்டும். பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் குமரிமாவட்டப் பகுதிகள் 50 ஆண்டுகாலம் இருந்தது என்பது வரலாறு.

குலோத்துங்கசோழன் தளபதிகளில் ஒருவன் நரலோகவீரன். இவனுக்கு கலிங்கராயன் என்ற ஒரு பெயர் உண்டு என்று சோழர் வரலாறு எழுதிய வரலாற்று ஆசிரியர் நீலகண்டசாஸ்திரியார் கூறுகிறார். சேரநாட்டுப் படையெடுப்புக்கு இந்த கலிங்கராயனின் பங்கு மகத்தானது என்று கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அந்த கலிங்கராயனின் பெயரால் எழுந்த ஊர்தான் இன்று கலிங்கராஜபுரம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இவ்வட்டாரத்தில் சோழர் ஆட்சி இருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. கலிங்கராஜபுரத்தை அடுத்துள்ள கோதேஸ்வரம் என்ற இடத்தில் சோழர் கட்டடக்கலையில் எழுப்பப்பட்டுள்ள ஒரு சிறிய சிவாலயம் உள்ளது. இது கலிங்கராயனால் கட்டப்பட்டதாக இருக்கலாம். மண்ணால் மூடப்பட்டிருந்த இந்த சிவலாயம் அண்மையில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது. கலிங்கராஜபுரத்தை அடுத்துள்ள முஞ்சிறை சிவன்கோயிலில் ராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## திருமலைநாயக்கர்

முஞ்சிறையை திருமலை என்றும் அழைப்பதுண்டு. குமரி மாவட்டத்தில் சிவராத்திரியன்று கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் அமைந்துள்ள 12 ஆலயங்களை நோக்கி பக்தர்கள் ஓடும் வழக்கம் தொன்றுதொட்டு இன்றும் இருந்து வருகிறது. அந்த சிவாலய ஓட்டம் திருமலை மகாதேவர் கோயிலில் இருந்துதான் தொடங்குகின்றது. திருமலைக்கோயிலை அடுத்துள்ள கோட்டையோடு கூடிய ஒரு



அரண்மனையில் தங்கியிருந்தபோது தான் மதுரைத் திருமலை நாயக்கரின் தாயார் அவரைக் கருவுற்றாள் என்றும், அந்தக் கோட்டைதான் இன்று உதச்சிக்கோட்டை என்று அழைக்கப்படுகிறது என்றும், இந்தத் திருமலையின் பெயரே திருமலைநாயக்கருக்கு இடப்பட்டது என்றும், இக்கோயிலில் உள்ள தங்க அங்கியும், கிரீடமும் திருமலை நாயக்கரால் வழங்கப்பட்டவை என்றும் தெரிவிக்கிறது. ஆலயக்குறிப்பேடு தங்க அங்கியும் கிரீடமும் 364 தோலா நிறைவுள்ளது என்றும், திருமலை நாயக்கரால் வழங்கப்பட்டவை என்றும் கூறுவதுண்டு. உதச்சி, தும்பச்சி ஆகிய பெயர்கள் நாயக்கர் இனப்பெயர்களாகும். சுசீந்திரத்தில் உதச்சியின் பெயரால் ஓர் அரண்மனை உள்ளது. அது தண்டிக்கப்பட்டனர் என்றும், அக்கலைக் கூடத்தில் பொதுக் கல்வி மட்டுமல்ல போர்ப்பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தது என்றும் அச்செப்பேடு குறிப்பிடுகிறது.

### தொல்காப்பியம்

தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பியர், அந்நூலை அரங்கேற்றிய அதன்கோட்டாசான், அந்நூலுக்கு பாயிரம் தந்த பனம்பாரனார் ஆகியோர் இந்த வட்டாரத்தைச் சார்ந்தவர்கள் தான் என்பது ஒரு சிறப்பான பெருமைக்குரிய தகவலாகும். அதங்கோடு, காப்பிக்காடு (காப்பியக்குடி) பனம்பழஞ்சி ஆகிய ஊர்கள் இவர்களது பெயர் கூறி நிற்கின்றன.



அண்மைக்காலம் வரை சீச்சிக் கொட்டாரம் என்று அழைக்கப்பட்டது. இப்போது அதை திருமலை நாயக்கர் கொட்டாரம் என்று அழைப்பர். தற்போது அங்கே தனியார் பள்ளி ஒன்று நடைபெற்று வருகிறது. சுசீந்திரம் ஆலயத்தில் கருடமண்டபத்தூண் ஒன்றில் திருமலைநாயக்கரின் சிலை ஒன்று அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழகம்

கலிங்கராஜபுரத்தை அடுத்துள்ள பார்த்திபசேகர புரத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஒரு பல்கலைக்கழகம் சிறப்புடன் திகழ்ந்தது என்று ஆய்குல மன்னன் கோக்கரு நந்தடக்கன் காலத்துச் செப்பேடு ஒன்று தெரிவிக்கின்றது. பல மாணவர்கள் அங்கு இலவசமாகத் தங்கி படித்து வந்தனர் என்றும், குற்றம் செய்த மாணவர்கள் கடுமையாக

தொல்காப்பியர் காலத்தில் வழங்கப்பட்ட பல தமிழ்ச்சொற்கள் சிறிதும் சிதைவில்லாமல் அதேபோன்று அதே பொருளில் இன்றும் இவ்வட்டாரப் பேச்சு வழக்கில் இருந்து வருவதை அறிஞர் வையாபுரிப்பிள்ளையவர்களும், டாக்டர் அறவாணன் அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். பிறமாவட்டங்களில் இந்த அரிய இனிய சொற்களை நாம் கேட்கமுடியாது. தொல்காப்பியத்தின் ஆசிரியர், அதனை அரங்கேற்றியவர், அதற்குப்பாயிரம் தந்தவர் ஆகிய மூவரும் கடல்கொண்ட குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதியான இன்றைய குமரிமாவட்டப் பகுதியைச் சார்ந்தவர்களாக இருந்ததால்தான் இடைச்சங்கத்திலே தோன்றிய நூல்கள் எல்லாம் அழிந்துபோக தொல்காப்பியம் மட்டும் தப்பிப் பிழைத்தது எனக் கருதமுடிகிறது.

இங்கே குறிப்பிட்டுள்ள அதங்கோடு, காப்பிக்காடு, பனம்பழஞ்சி ஆகிய மூன்று ஊர்களும்



பொதிகைமலையிலிருந்து மேற்கு நோக்கி ஓடுகின்ற தாமிரபரணி ஆற்றின் கரையிலே அமைந்துள்ளன. பொதிகை மலையிலிருந்து கிழக்கு நோக்கி நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் ஓடும் ஆறும் மேற்கு நோக்கி குமரி மாவட்டத்தில் ஓடும் ஆறும் ஒரே பெயரில் தாமிரபரணி என்று அழைக்கப்படுவது வியப்பை ஊட்டுகிறது.

### தாமிரபரணி

சுக்ரீவன் அனுமனுக்கு இலங்கை செல்ல வழிகாட்டியபோது அகத்தியர் சங்கம் வைத்து தமிழ் வளர்க்கும் பொதியமலை இடது பக்கம் வரும்படி பறந்து செல்ல வேண்டும் என்று கூறியதாக கம்பராமயணம் கூறுகின்றது. ''அம்மலையை இடத்திட்டு ஏகி'' என்பது கம்பர் வாக்கு. அவ்வாறாயின் அனுமன் குமரி மாவட்டப் பகுதி வழியே தான் பறந்து சென்றிருக்க வேண்டும். மேலும் வால்மீகி ராமாயணம் குறிப்பிடும் தாமிரபரணி குழித்துறை வழியாக ஓடும் தாமிரபரணியாகத்தான் இருந்திருக்க வேண்டும். இவ்வாறு புராணத்தின் அடிப்படையிலும் கலிங்கராஜபுரம் பகுதி புகழ்பெற்று விளங்குகின்றது.

### மார்த்தாண்டம்

கலிங்கராஜபுரத்தை அடுத்துள்ள பெரிய நகர் மார்த்தாண்டம். இது திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவின் பெயரால் வந்தது என்று கூறுவார் உண்டு. இது தவறாகும். வேனாட்டு மன்னர் மார்த்தாண்டவர்மா உருவாக்கிய திருவிதாங்கூர் ராஜ்யத்தை கி.பி.1758 முதல் 1798 வரை ஆண்டு வந்தவர். அவரது மருமகனான தர்மராஜா என்று அழைக்கப்பட்ட கார்த்திகை திருநாள் ஆகும். அவரது அமைச்சராக சிறப்புடன் பணியாற்றிய முஞ்சிறை அய்யப்பன் மார்த்தாண்ட பிள்ளை பெயரால் எழுந்த ஊர்தான் குழித்துறை நகராட்சியின் ஒரு பகுதியான மார்த்தாண்டம்.

முஞ்சிறையைச் சார்ந்த அய்யப்பன் மார்த்தாண்ட பிள்ளை மார்த்தாண்ட வர்மா மன்னர் காலத்தில் சர்வாதிகாரியக்காரர் என்ற பதவியில் பணியாற்றி அமைச்சர் ராமய்யன் தளவாய்க்கு உறுதுணையாக இருந்து நாட்டுக்குப் பணி செய்தார். போர்க்காலத்தில் அவரது வீரமும், ஆட்சிமுறையில் அவரது நிர்வாகத் திறனும் வெளிவந்தன. அதனால் பிள்ளையவர்கள் மன்னரின் பெருமதிப்பைப் பெற்றார். இவரது கலைத்திறனையும், அறிவுத்திறனையும் மலையாளக் கவிஞர் குஞ்சன் நம்பியார் புகழ்ந்து பாடியுள்ளார். இவரது திறமையை டச்சுக்காரர்கள் பாராட்டி எழுதியுள்ளனர்.

இவரது பணிகளைப் பாராட்டி திருவிதாங்கூர் மன்னர் தர்மராஜா, தொடுவட்டியிலிருந்து குழித்துறை வரை உள்ள பகுதிக்கு மார்த்தாண்டம் என்று பெயரிட்டார். முஞ்சிறை நெடுஞ்சாலையிலிருந்து உள்ளே அமைந்திருந்ததால் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இடத்திற்கு மார்த்தாண்டபிள்ளையின் பெயரிடப்பட்டது என்று கூறப்படுகிறது.

இவ்வாறு கலிங்கராஜபுரம் அமைந்துள்ள பகுதி இடைச்சங்க காலத்திலிருந்தே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு பகுதியாகத் திகழ்ந்து வந்துள்ளது. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



# கோ-ஆப்டெக்ஸின் வண்ணங்கள் உங்கள் எண்ணங்கள்.



கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:


- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண் MER
Licence No.TN/MS(O)/PR



கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத் தொடக்கவிழா
நரிப்பையூர் - இராமநாதபுரம் மாவட்டம்



பெரியார் நினைவு சமத்துவபுரம்
கலிங்கராசபுரம் - கன்னியாகுமரி மாவட்டம்